
# திருக்கோயில்

மே 1993 விலை ரூ. 3





மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் முன்னாள் திருக்கோயில் இதழாசிரியர் புலவரேறு ந.ரா.முருகவேள், அவர்கள் எழுதிய ''சைவ நாயன்மார் சரிதம்'' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. ஆணையாளர் திருமதி சி.கே. கரியாலி, ஐ.ஏ.எஸ். அவர்கள் நூலை வெளியிட்டார்கள். மயிலை குருஜி சுந்தரராம சுவாமிகள், துணை ஆணையாளர் திரு கு. சிதம்பரம் ஆகியோர் உடன் உள்ளனர்.



முகப்பு:

அருள்மிகு குருவாயூரப்பன்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை: 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஸ்ரீமுக ஆண்டு வைகாசி மே 1993 விலை ரூ. 3-00 | மணி: 5

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் அனுபவம்
— திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்.,

மழைபொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள்

ஆடல்காணீரோ, திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராாசன்

குடமுழுக்கு விழா தத்துவம்
— டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி

கீதைக்குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழனியப்பனார்

ஆளுடையபிள்ளையார்
— புலவர் தருமாம்பாள், எம்.ஏ.,

தெய்வச்சேக்கிழாரின் பெருமை
— மு. கிருட்டிணன், ஐ.ஏ.எஸ்.,

திருக்கோயில்களின் அமைப்பும் தத்துவமும்
— ச.கா. பத்மநாபன் பி.ஈ.

அனுமன் போற்றி
— புலவரேறு ஆ.ஜெ. ராமசாமி அவர்கள்

நம்நாட்டுச் சித்தர்கள்
— டாக்டர் இரா. மாணிக்கவாசகம்

அமர்நீதி நாயனார்
— பேராசிரியர் சுமதி குமாரசாமி

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்




திருமந்திரச்செம்மல்

டி.வி.வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

*திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள்*



**(22)**

திருமூல நாயனார் அருளிச் செய்துள்ள திருமந்திரம் தமிழ் மக்களின் மிக ஆதி நூல் என்று மெய்யுணர்வாளர்கள் போற்றுகின்றனர். சிவபெருமானுக்கு முதற்சீடரான நந்தி தேவரின் எட்டு மாணாக்கர்களில் தானும் ஒருவர் என்று பின்வரும் பாடலால் திருமூலர் கூறுகின்றார்:

''நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்,
நந்திகள் நால்வர், சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரமர்
என்றிவர், என்னோ டெண்மரு மாமே''.

(திருமந்திரம் 67)

நந்திகள் நால்வர், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் எனப்படுவர். சிவயோக மாமுனி என்பவரைப் பற்றி விவரம் இருப்பதாகத் தெரியவில்லை. பதஞ்சலியாரும் வியாக்கிரமரும் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டவரென்று கருதப்படுகின்றது.

நந்தி பெருமானது அருளால், தான் ஆசிரியன் எனப் பெயர் பெற்றதாகவும், அவரைச் சேர்த்து எட்டு ஆசிரியர்களும் இறைவனது ஆகம மந்திரங்களை எட்டு திக்கிலும் பரப்பினர் என்றும், திருமூலரிட மிருந்து திருமந்திரத்தைப் பெற்று உணர்ந்த அவருடைய சீடர்களும் பல இடங்களிலே திருமந்திரத்தை ஓதி நந்தி மரபினை நிறைபெறச் செய்தனர்என்றும் திருமந்திரம் கூறுகின்றது.

மெய்ப்பொருளை உணரும் சன்மார்க்கத்தை உலக மக்கள் அறிந்து உய்வதற்கு அறம் பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு புருஷார்த்தங்கள் உண்டு. அவற்றை விளக்கும் ஞானக்களஞ்சியமாக திருமந்திரம் தொன்று தொட்டு ஞானிகள் முனிவர்கள் போன்றவர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. இவற்றை சிவனெறி என்றும், சன்மார்க்கம் என்றும் கூறி திருமூலர் சைவ சமயத்திற்கு தனி நாயகன் நந்தியம்பெருமான் எனக் கூறுகின்றார்.

''சைவப் பெருமைத்தனி நாயகன் நந்தி
உய்யவகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையகத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே''

(திருமந்திரம்...1478)

நந்தி என்னும் சொல்லை பல இடங்களில் திருமூலர் சிவபெருமானைக் குறித்தே உபயோகிக்கின்றார். ஆயினும், தனக்கு ஆசானாக நந்தி தேவனை அவர் குறிப்பிடும் காரணத்தினால் விடை ரூபமாக அமைந்துள்ள நந்தி தேவனையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. நந்தி தேவனை விடை ரூபமாக தமிழ் மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக வணங்கியுள்ளதாக சான்றுகள் உண்டு என்று இலங்கையைச் சேர்ந்த பேறறிஞர் திரு சி. இராமநாதன் போன்றவர்கள் கருதுகிறார்கள். தாயுமான சுவாமிகள் 'நந்திமரபு வாழ்க 'மூலன் மரபு வரும் மவுன குருவாழ்க' என்று போற்றியுள்ளார். அவர் மேலும் கூறு

கின்றார் 'சக்கரவர்த்தி தவராசயோகி எனும் மிக்க திருமூலன் அருள் மேவு நாள் எந்நாளோ?

இலங்கையைச் சேர்ந்த பேரறிஞர் திரு சி. இராமநாதன் அவர்கள் திருமந்திரத்தில் மிக்க ஈடுபாடு உடையவர். திருமந்திரத்தின் பல நுட்பமான கருத்துக்களைத் தெளிவாக விளக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றவர். தன்னுடைய கருத்துக்களை அவர்கள் இன்றும் எனக்கு கடிதங்கள் வாயிலாக தெரிவித்து வருகின்றார்கள். அதற்கு நான் அவருக்கு மிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இதழில் அவருடைய சில கருத்துக்களை மட்டும் எடுத்துக் கூறிட விரும்புகின்றேன்.

''ஆதியில் பிரபஞ்ச உற்பத்திக்கு முன் இருந்த ஒரே அழியாத அனாதியான மெய்ப் பொருள் விந்து என்று திருமந்திரம் கூறுகின்றது. நாசா ( NASA ) விண்வெளிஆராய்ச்சியாளர்களும் இந்த உண்மையையே மின்சார காந்த அணுசக்தி ELECTRO-MAGNETIC WEAK AND STRONG ATOMIC ENERGY என்று கூறுகின்றது. இச்சக்தி, தன் அமுக்கம் தாங்க முடியாமல் வெடித்து பெருமுழக்கம் ( BIGBANG ) உண்டாகி பிரபஞ்சமும் உயிர்களும், அசைவு அசைவற்ற பொருள்களும் 50 கோடி சூரியன்களும், சந்திரன்களும், நட்சத்திர மண்டலங்களும், அண்டா அண்டங்களும், பஞ்ச பூதங்களும் வெளிப்பட்டதாக BIGBANG THEORY கூறுகின்றது.

**The Universe arose from a Region millions of smaller than a portion of an atom. The Universe arose from a Region millions of times smaller than a proton of an Atom.**

திருமூலரும் தன்ஞான திஷ்டியால் உணர்ந்ததை கீழ்க்காணும் திருமந்திரங்களால் விவரிக்கின்றார்;

''மேல்வரும் விந்துவும் அவ்வெழுத்தாய் விடும்
மேல்வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரும் அப்பதி அவ்வெழுத்தே வரின்
மேல்வரும் சக்கரமாய் வரும் ஞாலமே''.

*(திருமந்திரம்...1258)*

''ஞால மதாக விரிந்தது சக்கரம்
ஞால மதாய் விடும் விந்துவும் நாதமும்
ஞால மதாய் விடும் அப்பதி யோசனை
ஞால மதாக விரிந்தது எழுத்தே.''

*(திருமந்திரம்..1259)*

விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கர மாக
விரிந்த எழுத்தது மேல்வரும் பூமி.
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே.''

*(திருமந்திரம்..1260)*

---

## இவர்களால் முடியும்!

**ஆன்மிகத்தில் மிகுந்த வலிமையும், ஆற்றலும் நிறைந்தவன் விரும்பினால் வாழ்க்கையில் மற்ற எல்லாத் துறைகளிலும் பேராற்றல் பொருந்தியவனாக விளங்க முடியும்.**

*—சுவாமி விவேகானந்தர்*

---

''அப்பதுவாக விரிந்தது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ் அளவாய் விடும்
அப்பினில் அப்புறம் மாருதமா யெழ
அப்பினில் அப்புறம் ஆகாசமாமே.''

*(திருமந்திரம்..1261)*

''விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்த உயிரும்
விரையது விந்து விளைந்த விஞ்ஞானம்
விரையது விந்து விளைந்த அவன்தானே''

*(திருமந்திரம்...1279)*

'விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கரமாகும்
விளைந்த எழுத்தவை மெய்யினில் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திரமாமே.''

*(திருமந்திரம்...1280)*

அருணகிரி நாதரும் திருப்புகழில் ''நாத விந்து கலாதி நமோ நம'' வென்றும், திருவள்ளுவரும்

கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்,

தனக்குவமை இல்லாதான் தாள்
சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்.

எனக் கூறுகின்றார்.

கருவில் மிதித்த கமலப்பாதமான விந்துவிலிருந்து விரிந்து உயிராய் நிற்கின்றது. இந்த ஆத்ம சக்கரத்தை நந்தி கருவில் மிதித்த கமலப் பாதத்தை அகாரமாயும், அதிலிருந்து இகாரம், உகாரம், ஓங்காரம், மகாரம் ஐந்து எழுத்துக் களாய் பிரித்து விளக்கியுள்ளார். பதஞ்சலியும்

தனது யோக சூத்திரத்தில் பஞ்ச அக்கரமாய் (ஐந்து எழுத்து) பிரித்து பஞ்சாக்கர மந்திர மென்று விளக்கியுள்ளார்.

கருவில் மிதித்த கமலப்பாதத்திலிருந்து உதித்த உயிர், சீவன் சிவனென்று எல்லா ஞானி களும் கூறுகின்றார்கள். பின்வரும் திருமந்தி ரங்கள் அவற்றை விளக்குகின்றன.

'வித்திலன்றி முளையில்லை அம்முளை
வித்திலன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனல்ல வேறில்லை
அத்தன்மை யாகுமே அரன்நெறி காணுமே''.

(திருமந்திரம் 1932)

''சீவனென்ன சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே''

(திருமந்திரம்..2017)

'தானென்று அவனென்று இரண்டென்பர்
தத்துவம்
தானென்று அவனென்றுஇரண்டற்றதன்மையை
தானென்றிரண்டுள்ளார் கேவலத் தானவர்
தானின்றித் தானாக தத்துவ சுத்தமே''

(திருமந்திரம் 2348)

''ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக
நின்று சமய நிராகாரம் நீங்கியே
நின்று பராபரை ஞேயத்தை பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே''

(திருமந்திரம் 1437)

கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து எழும் சக்தியை, பிராணவாயுவை உணர்வால் ஓதுவதே இறைவனின் நாமம். திருமந்திரம் விளக்கமாகக் கூறுகின்றது.

''மருவும் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பு மன்னுடன் இசையும்
கருவில் மிதித்த கமலப் பாதமும்
உருவில் சிவாய நமவென ஓதே.'

(திருமந்திரம்.. 2798)

''நாட்டமிரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமுமில்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமுமில்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமுமில்லை சிவனவனாமே''

(திருமந்திரம் 604)

தாயுமானவரும்

''சைவ சமயமே சமயம் சமயாதீதபழம்
பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிக்காட்டும்
இக்கருத்தை விட்டு
பொய் வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம்
முத்திதரும்
தெய்வசபையை சேர வாரீர் ஜெகத்திரே''
எனக் கூறுகின்றார்.''

மேலும், பேரறிஞர் சி. இராமநாதன் அவர்கள் பிரணவத்தைப் பற்றி கூறும் சில கருத்துக்களை பின்வருமாறு காண்போம்:

''அகாரம், இகாரம், உகாரம், ஓங்காரம் மகாரமாகிய ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மா குரு தீட்சை பெற்ற ஞானிகளுக்கு அகாரம், உகாரம், மகாரமாகிய முப்பதங்களில் இயங்கி ஓம் என்னும் நாதத்தை, இறைவனின் நாமத்தை ஓதி சித்தாகாசத்தில் சோதியாய் வெளிப்படும் திருமந்திரம் விளக்குகின்றது.

'ஓரெழுத்தாலே உலகெங்கும் தானாகி
ஈரெழுத்தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத்தாலே முளைத்தோங்குப் சோதியை
மாவெழுத்தாலே மயக்கமே உற்றதே.''

(திருமந்திரம்...885)

அழியாத மெய்ப்பொருளான சீவன் 'ஓம்' என்னும் திருநாமத்தைக் கூறிக்கொண்டு சித்தா காசப் பரம வெளிக்கு ஏறித்தன் பசுத்தன்மை மாறிச் சிவனாகும் தத்துவத்தைக் கீழ்க் காணும் திருமந்திரம் கூறுகின்றது:

''கூறும் பொருளிது அகார உகாரங்கள்
ஏறும் பொருளிது சிந்தையுள் நின்றிட
கூறும் அகாரம் குழல் வழி ஓடிட
மாறும் அமர்ந்திடும் அண்ணலு மாமே.''

(திருமந்திரம்..765)

யோகிகள் பிரணவ சொரூபத்தில் மனத்தைப் பதித்து தவம் செய்து மண்ணுலகம் கடந்து விண்ணுலகப் பெருவெளியில் ஏறும் வழியில் பலநிலையங்களைக்கண்டுபலவாறாகப் பெயர்கள் சூட்டி விளக்கியுள்ளார்கள். திருமூலர் அவ்விடங்களை இலங்கை, தில்லை, சிற்றம் பலம், சிதம்பரம், அருளம்பலம், பேரம்பலம், சிவலோகம், சிவபூமியென்று பல பாடல்களில் கூறியுள்ளார்.

''மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரும் இவ்வானில் இலங்கைக் குறியுறுஞ்
சாருந்திலை வனத் தன் மாமலயத்து
ஏறுஞ் சுழுனை இவை சிவபூமியே''.

(திருமந்திரம்....2747)

ப்ராண வாயுவை அகார உகாரத்தின் சுழுனை நாடியில் இயங்கச் செய்வதே தவம்.

''இடைபிங்கலை இமவானோடு இலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனம், கைகண்ட மூலம்
படாவொன்றி யென்னும் பராபரமே''

(திருமந்திரம்..2754)

இமவான் சித்தாகாசப் பரவெளியைக் குறிக் கும்.

''அறம் அறியார் அண்ணல் பாதம் நினையுந்
திறம் அறியார் சிவலோக நகர்க்குப்
புறம் அறியார் பலர் பொய்மொழி கேட்டு
மறம் அறிவார் பகை மன்னி நின்றாரே''

(திருமந்திரம்...262)

அறம்—பிராணாயாமம் ஓதும் தவநெறி

அண்ணல் பாதம்— கருவில் மிதித்த இறைவனின் பாதம் ஆத்ம சக்கரத்தின் முதலெழுத்தான அகார எழுத்து

சிவலோக நகர்—விண்ணுலகில் தில்லை நகரம்

பொய்மொழி— அஞ்ஞானம்

மறம்—பாவ வழி.

மேலும் சில சிந்தனைகள். மந்திரம் என்னும் சொல்லுக்கு விளக்கமாகப் பொருள் கூறுவது சுலபமில்லை. தொல்காப்பியம் ரத்தினச் சுருக்கமாக சொல்லிவிட்டது. பட்டினத்துப் பிள்ளையார் 'பேசாத மந்திரம்' என்கிற சொற்றொடரை உபயோகிக்கின்றார்.

''வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம்
வேறொருவர்க்கு
எட்டாதபுட்பம்இறையாததீர்த்தம்இனிமுடிந்து
கட்டாதலிங்கம் கருதாத நெஞ்சம்கருத்தினிலே
முட்டாத பூசையன்றோ குருநாதன்
மொழிந்ததுவே''

''விந்து நாதத்தில் இயங்கும் சக்கரத்தை வெட்ட முடியுமோ? வாயால் பேச உரைக்க முடியுமோ? எமக்குள் பிராணவாயுவோடு நீர் வழங்குவதையும், தேன் கூறுவதையும், சீவன் சிவலிங்கமாய் மாறுவதையும் பஞ்சாக்கர மந்திரம் ஓதுபவர்களே அறிவார்கள். இது ஒரு பெரும் விந்தை. அற்புதம்.

''வழுதலை வித்திட்டேன் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுது கொண்டு ஓடினர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக்கனியே.''

(திருமந்திரம்..2869)

கத்தரி வித்தை நாட்ட பாவற்கொடி முளைத்தது. மண்ணைத் தோண்ட பூசணிப்பூ வெளிப்பட்டது. என் மனத்தில் குடிகொண்டிருக்கும் பல கற்பனைகளும் நாங்கள் போகிறோம் போகிறோமென்று தொழுது கொண்டு ஓடினர். மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு ஞானம் பழுத்து அமிர்தம் விளைந்தது.

''தத்துவமானது தன்வழி நின்றிடில்
வித்தகனாகி விளங்கி இருக்கலாம்
பொய்த் தவமாம் அவை போயிடும் அவ்வழி
தத்துவமாவது அகார எழுத்தே.''

(திருமந்திரம்...2180)

தன் ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து வழியான பஞ்சாக்கர மந்திரத்தை ஓதி நின்றிடில் மெய்ப்பொருளை உணர்ந்த ஞானியாகஉலகில் வாழலாம். உலக மாயைச் சிக்குகள் கழன்றுவிடும். மெய்ப்பொருளாவது கருவில்மிதித்த கமலப் பாதமான அகார எழுத்து. அகார எழுத்தே விரிந்து பிரபஞ்சத்தில் சகல தோற்றங்களையும் படைத்துக் காத்து நிற்கும்மெய்ப்பொருள். அவனே இறைவன். திருமந்திரம் கூறுகின்றது.

''ஆரும் அறியார் அகாரம் அவனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்
மாறி எழுந்திடுந் ஓசைய தாமே''.

(திருமந்திரம்..1751)

அகாரத்தை இறைவனாகவும், அதிலிருந்து எழுந்த உகாரத்தை இறைவி, சத்தி சக்தியாகவும், இரண்டும் சேர்ந்து பிரபஞ்சத்தைப் படைத்த ஓமெனும் ஓசையெனக் கூறுகின்றது.

'அகாரமுதலாய அனைத்துமாய் நிற்கும்
உகாரமுதலாய் உயிர்ப்பு எய்தி நிற்கும்
அகாரம் உகாரம் இரண்டும் அறியில
அகார உகாரம் இலிங்கம தாமே''.

(திருமந்திரம்...1753)

திருவள்ளுவரும் அகர எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட ஐந்து எழுத்துக்களுமே ஆதிபகவன் முதல் உலகமென்று கூறுகின்றார்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.''

திருமூலரும் பின்வரும் திருமந்திரத்தால் இந்த உண்மையையே வலியுறுத்துகின்றார்:

''ஐந்தெழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
ஐந்தெழுத்தாற் பல யோனி படைத்தனன்
ஐந்தெழுத்தால் இவ் அகலிடம் தங்கினன்
ஐந்தெழுத்தாலே அமர்ந்து நின்றானே''.

(திருமந்திரம்....966)

அகாரம், இகாரம், உகாரம், ஓங்காரம், மகாரமாகிய ஐந்து எழுத்துக்களில் இயங்கும் ஆத்மா 'ஓம்' என்னும் இறை நாமத்தை, பஞ்சாக்கர மந்திரத்தை ஒலிக்கின்றது. இம்மந்திரத்தைப் பற்றி ஓதினால் இவ்வுலக வாழ்வில் பேரின்பமும் ஆத்ம விமோசனமும் உண்டாகுமென்று எல்லா ஞானிகளும், முனிவர்களும், ரிஷிகளும் விளக்கமாகக் கூறியுள்ளார்கள். நாமும் இந்த உபதேசத்தை அனுட்டித்து உய்வு காண்போமாக.

## வேண்டிய மூன்று குணங்கள்

**தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்.**

— *சுவாமி விவேகானந்தர்*

# மழைபொழிவிக்கும்

# வள்ளல் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்தர் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் பாடியுள்ள (1) திருக்கழுமலம், (2) திருவையாறு, (3) திருமுதுகுன்றம் (4) திருவீழிமிழலை, (5) திருக்கச்சியேகம்பம் (6) திருப்பறியலூர் விரட்டம், (7) திருப்பராய்த்துறை ஆகிய ஏழு திருப்பதிகங்களும் மழை பொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்களாகும். இப்பதிகங்களைப் பாடி வேண்டினால் எத்தகைய கோடையிலும் அமுதமழை பொழிந்து அவனி தழைக்கும் என்பது ஆன்றோர்கள் நமக்கு உணர்த்தியுள்ள உண்மையாகும். கடும் வறட்சி வாட்டும் இக்கோடையில் மழை பொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்களைப் பாடி நாம் பயன்பெற்றிடுவோமாக.

## 1. திருக்கழுமலம்

சேவுயருந் திண்கொடியான் றிருவடியே
 சரணென்று சிறந்தவன்பால்
நாவியலும் மங்கையொடு நான்முகன்தான்
 வழிபட்ட நலங்கொள்கோயில
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
 செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
 கண்காட்டுங் கழுமலமே

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
 மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தான்
 அமரர்தொழ வமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறும்
 இறைவனது தன்மைபாடித்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
 பாட்டயருங் கழுமலமே.

அலங்கன்மலி வானவருந் தானவரு
 மலைகடலைக் கடையப்பூதங்
கலங்கிவெழு கடுவிடமுன் டிருண்டமணி
 கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயல்மறந்து மீன்சனிபுக்
 கூன்சலிக்குங் காலந்தானுங்
கலங்கலிலா மனப்பொருவண் கையுடைய
 மெய்யர்வாழ் கழுமலமே

பாரிதனை நலிந்தமரா பயமெய்தச்
 சயமெய்தும் பரிசு வெம்மைப்
பாரிசையும் புறமூன்றும் போன்றவொரு
 சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையில்
 சூளிகைமேன் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
 மகிழ்வெய்துங் கழுமலமே.

ஊர்கின்ற வரவமொளி விடுதிங்க
 ளொடுவன்னி மத்தமன்னும்
நீநின்ற கங்கைநகு வெண்டலைசேர்
 செஞ்சடையா னிகழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
 மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
 சுதைமாடக் கழுமலமே.

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
 தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ
 ழமையளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்த மதுவுகுப்ப
 வதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகட மிளகவளர் கரும்பிரிய
 வசும்பாயுங் கழுமலமே

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
 நிலனைந்தாய்க் கரணநான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு
 வாய்நின்றா னமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
 கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவயெறிகற் போற்சுனையிற் கரைசேரப்
 புள்ளிரியுங் கழுமலமே

அடல்வந்த வானவரை யழித்துலகு
 தெழித்துழலு மரக்கர்கோமான்
மிடல்வந்த இருபதுதோ ணெரியவிரற்
 பணிகொண்டோன் மேவுங்கோயில
நடவந்த வுழவரிது நடவொணா
 வகைபரவாய்த் தென்றதுன்று .
கடல்வந்த சங்கீனற முத்துவயற்
 கரைகுவிக்குங் கழுமலமே

பூமகள்தன் கோனயனும் புள்ளினொடு
கேழலது வாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணா
வகைநின்றா னமருங்கோயில்
பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணன்மருவுஞ் சமணர்களு முணராத
வகைநின்றா னுறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலிவிழவினொலி
யிவையிசையா மன்மேற்றேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க
மேற்கடுக்குங் கழுமலமே.

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்துள்
ஈசன்றன் கழன்மேனல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றா னயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந் திவை
வல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே.

## 2. திருவையாறு

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்தபோ தாக அஞ்சேலென்
றருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே

விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையாடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன் வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே.

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காலப் பொழிலினுழைந்து கூர்வாயான்
விரகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கானல்
இரைதேருந் திருவையாறே.

ஊன்பாயு முடைதலைகொண் டூருரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கடோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே

நீராடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங் கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாவம்
பொழிலணைந்த கமழ்தார் வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலும் திருவையாறே.

வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே

நின்றுலா நெடுவிசும்பு வெருக்கிவரு
புரமூன்று நீள்வாயப்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில் கூவக்கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே

அஞ்சாதே கயிலாயமலையெடுத்த
அரக்கர்கோன் தலைகள்பத்தும்
மஞ்சாடு தோணெரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய விளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்றும்
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே



# நிதிவசதியில்லாத திருக்கோயில்களின் ஒரு கால பூஜைக்காக நிரந்தர வைப்புநிதி ஏற்படுத்தும் திட்டம்

## மேலும் சலுகைகள்

தமிழ்நாட்டில் உள்ள நிதி வசதி இல்லாத திருக்கோயில்களின் ஒருகால பூஜைக்கு நிரந்தர ஏற்பாடு செய்வதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களால் கீழ்க்கண்ட திட்டம் அறிவிக்கப் பட்டது.

இத்திட்டத்தின்படி அந்தந்த பகுதியிலுள்ள பொது மக்கள் தாங்களாகவே முன் வந்து வைப்புநிதி மூலதனமாக ரூ. 25,000 வழங்கிட வேண்டும். அவ்வாறு ரூ. 25000 நன்கொடை பெற இயலாத சூழ்நிலையில் ரூ. 12,500 பொதுமக்கள் நன்கொடை செலுத்தினால் அரசின் பங்கிற்கு மாண்புமிகு முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து மேற்கொண்டு ரூ. 12,500 செலுத்தி ஆகக் கூடுதல் தொகை ரூ. 25,000-க்கு மூலதன வைப்புநிதி ஏற்படுத்தி, இம்மூலதன வைப்புநிதியின வட்டியைக் கொண்டு நலிவுற்ற திருக்கோயிலின் ஒரு கால பூஜை நிரந்தரமாக நடத்திட ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

இப்போது இத்திட்டத்திலும் மேலும் சலுகைகளை நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். ரூபாய் 25000-த்தில் அரை பங்குத்தொகை ரூபாய் 12,500 நன்கொடையாகப் பெற இயலாதவர்கள் கால் பங்குத்தொகை ரூபாய் 6250 மட்டும் வசூலித்துச் செலுத்தினால் மீதி முக்கால்பங்குத் தொகை ரூ. 18,750 முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும்பராமரிப்பு நிதியிலிருந்து வழங்க ஆவன செய்யப்படும் என்று தற்போது அறிவித்துள்ளார்கள்.

எனவே பொது மக்கள் அனைவரும் நலிவுற்ற திருக்கோயில்களின் ஒருகால பூஜைக்காக ரூ. 6,250 மட்டும் வசூலித்து வழங்கி அரசு வழங்கும் ரூ. 18,750 நிதியுதவியைப் பெற்றுத் திருக்கோயில்களின் ஒருகால பூசைத் திட்டத்தைச் சிறப்புற நடத்தித் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யானாமின் மேனித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீசர்
இறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே.

அன்னமலி பொழில்கு ழையாறெம்
பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கால்
ஈசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென்
றெய்துவார் தாழாதன்றே.

மற்ற திருப்பதிகங்கள் வரும் இதழில் இடம் பெறும்

# ஆடல்



# காணீரோ...!

கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன் [28]**

கீர்த்தி பூஷண பாண்டியன் அரசாட்சி செய்தபோது ஊழி காரணமாக உலகம் அழிந்தது. சோமசுந்தரப் பெருமானின் ஆலயம், பொற்றாமரை, இடபயானை, நாக, பசு, பன்றிமலைகள் தவிர யாவும் அழிந்தன. சிவ பெருமான் மீண்டும் யாவற்றையும் படைத்துப் பாண்டிய வம்சத்தையும் படைத்தார். வங்கிய சேகரபாண்டியன் என்பவன் தோன்றி அரசாட்சி செய்தான். மக்கள் நன்கு வசிக்கத்தக்க மதுரை நகரத்தை மீண்டும் நிர்மாணம் செய்ய எண்ணி சிவபெருமானிடம் மதுரையின் எல்லையைக் காட்டும்படி வேண்டினான்.

"இத்தனை மாக்களும் இருக்கத் தக்கதா
பத்தனும் காண இப்பதிக்கண் ஆதியே!
வைத்தறை செய்திடும் வரம்பு காண்கிலேன்
அத்த மற்றதனை இன்று அறியக்
காட்டென்றான்''

அப்போது அங்கு இறைவன் ஒரு சித்த வேடத்துடன் தோன்றினார். தனது கையில் கட்டியிருந்த கங்கணமான பாம்பை அழைத்து 'இவ்வூரின் எல்லையை அளந்து காட்டு' என்றார். பாம்பு கீழ்த்திசையில் வாலை வைத்து வலம் வந்து, வாலை வாயால் கவ்வி, எல்லை காட்டிய பின் .மீண்டும் இறைவன் திருக்கையில் கங்கணமாகி நின்றது.

,'கீட்டிசைத் தலைச்சென்று தன்கேழ்கிளர்
வாலை
நீட்டிமா நகர்வலம்பட நிலம்படிந்துடலைக்
கோட்டி வாலை வாய் வைத்து வேல்
கொற்றவர்க்கு எல்லை
காட்டி மீண்டு அரன் கங்கணமானதுகரத்தில்''

தெற்குப் பக்கம் திருப்பரங்குன்றமும், வடக்கில் ரிஷபமலையும், கிழக்கில் திருப்புவனமும், மேற்கில் திருவேடகமும் நாலுவாசல் எல்லையாக வைத்து, மதுரை, நகரை மதில் வைத்து ஏற்படுத்தினான். அதற்கு ஆலவாய் மதில் எனப் பெயர் வைத்து, மதுரையும் ஆலவாய் எனப் பெயர் பெற்றது.

அக்காலத்தில் விக்கிரமச் சோழன் என்பவன் பெரும்படையுடன் மதுரையின் மீது படையெடுத்து வந்தான். திகைத்து திடுக்கிட்ட பாண்டியன் கோயிலையடைந்து 'பெருமானே! சோழன் அயல் நாட்டவர்களான துருக்கர் ரொட்டியர் முதலானவர்களுடன் சேர்ந்து என் மீது படை எடுத்து வருகிறான். அவனை எதிர்க்க எனக்குப்பதாகை இல்லையே' என முறையிட்டான்.

'' அடைந்து பணிந்து அருள் நாயகனே!
அடியனோடு விக்கிரமன்
தொடர்ந்து அமராட அயற்புல மன்னவர்
தொகையொடு பாசறைவாய்
படர்ந்து இறை கொண்டனனே!
பொரவொத்தபதாகை எனக்கில்லையே'
மிடைந்து வரும் படைமிக்க இடத்து அரண்
வேறுளதோ இறைவா''

''பாண்டியனே! சோழனை எதிர்த்துப் போராடு. உனக்கு வெற்றி கிடைக்க நான் உதவுகிறேன்'' என அசரீரியாக இறைவன் பேசினார்.

அவ்வாறே பாண்டியன் சோழ அரசனது சேனையை எதிர்த்துப் போராடி தோல்வியடைந்து ஓட ஆரம்பித்தான். சோழ அரசனை படுவில்வீழ்த்தியும் போர்க்களத்தின் நடுவில் தண்ணீர்வைத்து பாண்டியர்களுக்கு உதவி புரிந்த இறைவன், திடீரென்று அவ்விடத்தில் ஒரு போர் வீரன் உருவத்தில் தோன்றி, பாண்டியனது சேனைக்குத் தலைமை தாங்கி, ''சுந்தரேசன்'' எனப் பெயர் எழுதப் பெற்ற கூர்மையான பாணத்தை வில்லில் பூட்டி விடுத்தார். ஒவ்வொரு கணையும் பதினாயிரம் வீரரைக் கொன்றது. 'ஒரு கணைக்கு இவ்வளவு பலமா?' என வியந்தசோழன் அந்தக் கணையில் 'சுந்தரேசன்' எனப் பெயர் பொறித்திருப்பது கண்டு ''பாண்டியனுக்கு இறைவனே துணை செய்கிறார்' என்று திரும்பிச் செல்லலானான்.



## மிக உத்தமன் யார்?

நன்மையே புரிபவர்க்குத் தீமை புரிகிறவன் பாவியிலும் பாவி
தீமை புரிபவர்க்குத் திரும்ப தீமை புரிகிறவன் பாவி
நன்மை புரிபவர்க்கு நன்மை புரிகிறவன் உத்தமன்
தீமை புரிபவர்க்கும் நன்மை புரிகின்றவன்மிக உத்தமன் ஆவான்.

—டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்



"அன்னகூர்வாளி தன்னைக் கொணர்கென
அதனை வாசித்து
இன்னது சுந்தரேசன் என வனைந்திருப்பதுஈது

தென்னவற்கு ஆலவாயான் துணை செய்த
செயல் என்றஞ்சி
பொன்னி நாடுடையான் மீண்டு போகுவான்
போகுவானை."

அப்படித் திரும்பி ஓடும் சோழனைக் கண்டு அவனுக்கு உற்றதுணையாக வந்த மற்ற அரசர்கள் அவனை நிறுத்தி 'போருக்குத் தோற்று ஓடுகிறாயா? உனது வீரம் என்னாவது?" என்றெல்லாம் தடுத்து மீண்டும் போர் செய்யத் தூண்டினர். சோமசுந்தரப் பெருமான் மீண்டும் கடுமையாகப் போர் புரிந்து பல்லாயிரக்கணக்கான சேனைகளை அழித்தார். நச்சு மரத்தை அழிப்பதற்காக மூட்டிய தீ, சந்தன மரத்தையும் அழிப்பதுபோல, சோழன் மீது விட்ட பாணங்களால் கூட வந்த அரசர்களும் கொல்லப்பட்டனர். சோழன் தோற்று ஓடினான். பாண்டியனை நோக்கிப் புன்னகை புரிந்த வேடர் மறைந்தருளினார். பாண்டியன் தனக்கு வில்லாளியாக வெற்றி தந்த சோமசுந்தரப் பெருமானுக்கு மாணிக்கத்தால் இழைக்கப் பெற்ற வில்லும், சுந்தரன் எனப் பெயர் தீட்டப்பட்ட அம்பும் செய்து காணிக்கை செலுத்தி வணங்கி வாழ்ந்தான்.

—(தொடரும்)

# குடமுழுக்கு விழா தத்துவம்!

டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி, திலகவதியார் ஆதீனம, புதுக்கோட்டை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

யாகாக்னி என்ற யாகத்தின் தீ, 'வைஸ சுராக்கினி'' என்றும், 'சிவாக்கினி'' என்றும் இரு வகைப்படும்.

யாக குண்டங்கள்; சிரசு, இதயம், கண்டம் நாபி, யோனி, மேல்மேகலை, நடுமேகலை, கீழ் மேகலை, பரிஸ்த்ரணம் என்னும் ஒன்பது உறுப்புக்களை உடையன. இவற்றின் முன்னே உள்ளஎட்டும், இறைவனது அட்ட மூர்த் தங்கள் அல்லது எட்டுத் திருவுருவங்களாகும்.

பரிஸ்த்ரணம் என்பது, யாக குண்டத்தைச் சுற்றிப் போடப்படும் தருப்பைகளாகும்.

பிண்டமாகிய நமது உடம்பில் உள்ள தலை, கழுத்து, மார்பு, தொப்புள், பாதம் என்னும் ஐந்து பிரிவுகளும் நமது ஆலயத்தில்,

கர்ப்பக்கிரஹம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், யாகசாலை, கோபுரம் என்னும் ஐந்து பிரிவுகளாக விளங்குகின்றன.

அண்ட மாயையில் உள்ள சாந்தியதீதை சாந்தி வித்தை, பிரதிஷ்டை, நிவர்த்தி என்ற ஐந்து கலைகளும், ஐந்து பிரகாரங்களாகும்.

இறைவன்; அருவம், அருவுருவம், உருவம் தாங்கி வருவது, உயிர்களாகிய நாம் உயரும் பொருட்டும், உய்யும் பொருட்டும், மனிதன் தெய்வமாகும் பொருட்டும் ஆகும்.

பள்ளி அறைக் கண்ணாடியில் அருவமாக வும்; சிவலிங்கத்தில் அருவுருவமாகவும்; சந்திர சேகரர், விநாயகர், சுப்ரமணியர், அம்பாள் முதலியன உருவமாகவும் அறிந்துணர வேண் டும்.

இந்து சமயிகள் அதாவது சைவ சமயத் தைச் சார்ந்தோர், வணங்குகின்ற திருவுருவங் களையும், சமய உண்மைகளையும், தத்துவங் களையும், இத்திருவுருவங்கள் தமது தோற்றங் களினாலேயே உணர்த்திக் கொண்டிருக்கின் றன.

இவற்றிற்கும் மேலாக, மந்திர சமஸ்கா ரங்களால் அருளை அள்ளிப் பொழிகின்றன.

ஆலயங்களில் செய்யப் பெறும் மேற் கண்ட கிரியைகள் யாவற்றிற்கும் சிகரமாக விளங்குவது கும்பாபிஷேகமாகும். சிவஸ்ரூப மாக அல்லது அம்பாள், விஷ்ணு, விநாயகர், சுப்ரமணியர் உருவங்களாக அமைந்த யாக சாலையில் அந்தந்தத் திருவுருவங்களே ஆகிய அக்னியிலிருந்து எழும்புகின்ற ஜ்வாலைகளும், வெப்பப் புகைகளும், வேத ஆகம ஓசைகளும், திருமுறைகள் திவ்யப்ரபந்த ஓசைகளும்,

சிவனடியே அல்லது மற்ற தெய்வங் களையே சிந்திக்கப் பெற்ற மந்திரகிரியா பாவனைகளுடன் செய்யும் செயல்களும் மெய் யன்பர்களது, மனம் உருகிய பிரார்த்தனை களும், வழிபாடுகளும் ஒன்றாகச் சேர்ந்து, எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனது திரு வருட் சக்தியைத் தூண்டி எழுப்பிக் கும்பத்தி லும் அதன் உள் இருக்கும் தீர்த்தங்களிலும் விளங்கி நிற்கும்படி செய்கின்றன.

இப்புனித நீர், பௌதீக மின்சாரத்தை உண்டாக்கக் கூடியது என்பதை நாம் அறிந் துணர வேண்டும்.

இப்புனித தீர்த்தத்தில், தெய்வீக மின் சார ஆற்றல் விளங்குமாறு செய்து, அத்தூய நீரை சிவாச்சாரியார்கள், தமது மேலான மந்திர சமஸ்காரங்களால் திருவருள் விளக்கம் பெற்று, பிரதிஷ்டை செய்யப் பெறுவது பிம் பங்களில் அதாவது தெய்வத் திருவுருவங்களின் மேல் உள்ள கோபுரங்களின் மேல் உள்ள கல சங்களில் கும்ப நீரை அபிஷேகம் செய்வது கும்பாபிஷேகமாகும்.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய இராஜராஜ சோழன், கோயிலைக் கட்டி முடித்துக் கும்பாபிஷேகம் செய்த பின் ஒரு கல்வெட்டை நாட்டினான்.

''அறம் செய்தான் செய்தான்
அறம் காப்பான் பாதம்
சென்னிமேல் வைப்பாம்''

தர்மத்தைச் செய்து, கோயிலைக் கட்டியவன், கட்டிவிட்டான். உலகுள்ளவரையிலும் இவ் வறப்பணி கோயில் வழிபாடு தொடர்ந்து

நடக்க வேண்டுமே! இந்த அறத்தை எவன் ஏற்று நடத்துகிறானோ அவன் திருவடிகளை எம்தலை மேல் வைத்துப் போற்றுவோம்'' என்றெழுதி வைத்தான். இவ்வறப்பணி ஊழிக் காலம் வரையும் நடந்தேற வேண்டும் என்பதிலே தான் எவ்வளவு தீவிரமான பற்று என்பதைப் பாருங்களேன்?

''விளக்கிட்டார் பேறுசொல்லின்

மெய்ந்நெறி ஞானமாகும்''

திருக்கோயில்களில் தொடர்ந்து விளக்கெரிய வைப்பது ஞானத்தை நல்கி மனிதனை தெய்வமாக உயர்த்தும்.

அம்பிகை, அருளைத்தரச் சித்தமாக இருக்கிறாள். அவளது இடக்கரம், பாதத்தைக் காட்டுகிறது. அவளது வலக்கரம் பாதகத்தை நீக்கிச் சாதகம் செய்து, அபயம் தருகிறேன் என்று அருள்கின்றது.

பஞ்ச கிருத்யங்கள் என்று சொல்லப் பெறும் ஐந்தொழில்களும் அம்பிகையின் திருவிழாவிலே அடங்கியுள்ளன.

கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலை யும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த் தத் திருவிழா அருளையும் உணர்த்துகின்றன.

பத்து நாட்கள் பக்குவமாகக் கொண் டாடப் பெறுகின்ற முதல் நாள் திருவிழா: சரீரத்தை உண்டாக்குகின்றது. இரண்டாம் நாள் திருவிழா நல்வினை தீவினையைப் பயன் படுத்தலைக் குறிக்கின்றது. மூன்றாம் நாள் திருவிழா முக்குணங்களை எழுப்புகின்றது. நான்காம் நாள் திருவிழா, உட்சருவிகளாகிய அந்தக் கரணங்களை முயற்பிக்கின்றது. ஐந் தாம் நாள் திருவிழா ஞானேந்திரியங்களைப் பஞ்சேந்திரங்களை வசப்படுத்தச் செய்கின் றது. ஆறாம் நாள் திருவிழா; காமக், குரோத, லோப, மோக, மத, மார்ச்சர்யங்களை நீக்கு கின்றது. ஏழாம் நாள் திருவிழா, ஏழுவகை மந்திரங்களைப் பதிப்பித்து ஏழு பிறப்பும் தீயவை தீண்டாது இருக்கச் செய்கின்றது. எட்டாம் நாள் திருவிழா, பாச நீக்கம் செய் கின்றது. ஒன்பதாம் நாள் திருவிழா, மும் மலங்களைக் கெடுக்கின்றது. பத்தாம் நாள் திருவிழா, சிவானந்தத்தைக் கொடுக்கின்றது. இந்த வகையாக எந்தத் திருக்கோயில்களின் திருவிழாக்களாக இருந்தாலும் மனிதனுக்கு அருளைக் கொடுத்து, வாழ்வின் பொருளை உணர்த்தி மனிதனைத் தெய்வமாக உயர்த்து கிறது.

பல திருக்கோயில்களில் தேர்த்திரு விழாக்கள் நடைபெறுகின்றன. அந்தத்தேரைப் பற்றிய தத்துவமும் அறிவது அவசியந்தானே!

தேரின் அச்சுக்கள் மந்திரகேசரி மலை களாகவும், இருசக்கரங்களும் சூரிய சந்திரர் களாகவும், சந்திகள் எல்லாம் ஆறுருதுக்களாக வும், பதினான்கு லோகங்களும் பதினான்கு தட்டுக்களாகவும், ஆகாயம் ஆசனமாகவும், நதிகள் கொடிகளாகவும், நட்சத்திரங்கள் விதானங்களாகவும், மோட்சலோகம் மேல் விரி வாகவும், நாள் நாழிகை முதலியன இருக்கு மரங்களாகவும், அட்டமலைகள் தூண்களாக வும், அட்டயானைகள் தாங்குவனவாகவும், சப்த சமுத்திரங்கள் திரைச் சீலைகளாகவும், கர்மஞானேந்திரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், வேத உபநிட தங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாக வும், நான்கு வேதங்களும் குதிரைகளாகவும்; கங்கை விசிறவும்; ஊர்வசி நடனமிடவும், சித்திரத்தேரின் பாகங்கள் இத்தரையில் அழ கொழுக அமைந்துள்ளன.

இத்தனையும் நாமறிவதால், நம் ஈழை நாட்டின் தத்துவக் கோட்பாடுகளை முற்றிலு லும் உணர்ந்து, மேலாம் நிலைக்கு ஆளாக லாம்.

———

**உலக மக்களே! தன்னடக்கம் கொள்ளுங்கள்**

**பிறருக்குக் கொடுங்கள், அன்புவழிச் செல்லுங்கள்**

**எல்லா மக்களும் சந்தோசமாகவும்**

**சுபிட்சமாகவும் இருக்க உதவுங்கள்.**

—ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்.



# கீதைக் குறள்கள்!

அறநெறியண்ணல் கி.பழநியப்பனார்

## சிவனைப் பற்றிய குணங்கள்
### (குணத்ரய விபாக யோகம்)

உயர்ந்தோர் ஞானம் உரைக்கிறேன் கேட்கவும்
உயர்பதம் கிட்டும் உனக்கு (14[1)

இத்தகை ஞானம் எய்தியோர் பெற்றிடுவர்
எத்தகைப்பி றப்புமிலாப் பேறு (14[2)

பிர்மா உயிர்கள் பிறக்குமிடம் என்றால்அப்
பிர்மா எனதுகருப் பை (14[3)

அதனால் உயிர்க்குப் பிருமனே அன்னை
அதற்குநான் தந்தையா வேன் (14[4)

பிரகிருதி யில்முக் குணங்கள் பிறந்து
குரம்பையில்ஆன் மாவைப்பற் றும் (14[5)

சத்துவம் தூய்மை ஒளிஞானம் தந்தாலும்
அத்துணையும் பந்தமாம் ஆங்கு. (14[6)

இராசதம் எல்லையற்ற வேட்கையும் பற்றும்
அராகமும் ஓங்கிடச்செய் யும் (14[7)

தாமதம் தந்திடும் சோம்பலும் தூக்கமும்
தூமமும் சூழ்மடமை யும். (14[8)

சத்துவம் இன்பம் தருமாம்; இராசதம்
நத்தும் கருமச் செயல்; (14[9)

தாமதம் மூட மதியைத் தருவது;
சேமம் இதையுணர் தல். ( ,, )

இக்குணங்கள் ஒவ்வொன்றும் மற்றதை
'ஏன்றவரை
மிக்கவிடா மல்தடுக் கும் (14[10)

பொறிகளில் ஞானவொளி பொன்றாது வீசின்
அறிகசத்து வம்மிக்கோர் என்று (14[11)

பேராசை செய்கைப் பெருக்கம் பரபரப்பு
தீரா இராசத மாம் (14[12)

அறிவின்மை சோம்பல் அசைவின்மை தூக்கம்
அறிகுறியாம் தாமதத் திற்கு (14]13)

சத்துவம் ஓங்கு நிலைதனில் சாவோர்கள் .
உத்தமப்பொன் னாடுசேர்வர் . (14[14)

இராசதர் மாண்டபின் ஈங்கு கருமம்
குறையாப் பிறப்பெடுப் பர் (14[15)

தாமதம் மேலோங்கச் சாவோர் உலகினில்
பாமர ராய்ப்பிறப் பர் ( ,, )

சத்துவம் இன்பம் தருமாம்; இராசதம்
நித்தம்துன் பந்தந் திடும் (14[16)

தந்திடும் தாமதம் என்றும் அறிவின்மை
எந்தச் செயலிலும்முன் நின்று; ( ,, )

சத்துவத்தில் ஞானம் தழைக்கும்; இராசதம்
வித்தாம்பே ராசைக்கெல் லாம். (14[17)

தாமதத்தில் சோம்பல் மயக்கம் தழைத்திட
வாமமாம் மூடனாக்கும் ( ,, )

முன்நிற்பர் சத்துவரே மூவரிலும்; தாமதர்
பின்நின்று தாழ்ந்திடு வர். (14[18)

இராசதர் என்றும் நடுநிற்பர் என்ற
தராதரம் நன்கறிந்து கொள். ( ,, )

இராசதர் என்றும் நடுநிற்பர் என்ற
தராதரம் நன்கறிந்து கொள். ( ,, )

கருமத்திற் கெல்லாம் குணங்கள் கர்த்தா;
பெருமைகுணா தீதம் தரும். (14[19)

உடம்புடன் ஒன்றியம் முக்குணங்க டந்தோர்
கடப்பர் பிறவிக் கடல். (14[20)

(குறிப்பு:—இக்குணங்களைக் கடந்தோன் எப்படி இருப்பான்? அவன் ஒழுக்கம் யாது? எவ்வாறு அவற்றை அவன் கடந்தான்?''

என்பனவற்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறான் அருச்சுனன்.) (14[21)

ஒளிமயக் கம்செயல் மற்றும் உணர்வைத்
தெளிந்துவிரும் பான்வெறுக் கான். (14[22)

சற்றும் மதியாது, சார்ந்த குணங்களால்
சற்றுமே பாதிப்பி லாது, (14[23)

ஆன்ம தியானத்தில் முற்றும் அசைவின்றித்
தான்பெற்ற இன்பதுன் பம்.

மண்பொன் யாவையும் ஒன்றாய் மதிப்பான்
நண்பன்மாற் றானென்றெண்ணான். (14[24)

புகழ்இகழால் மாறுபடான், கர்மம் புரிவதால்
நிகழும் பயனைத் துறந்து, (14[25)

மனமொன்றிப் பக்தியோ கத்தினால் மாற்றிக்
குணங்கடந்து மேல்நிலையெய் வர். (14[26)

என்றுமுள பிர்மம் நிலைபெறுதல் என்னிடமே
என்பதால் நானேபே றின்பு (14[27)

# ஆளுடைய பிள்ளையார்

புலவர் **தருமாம்பாள்**, எம்.ஏ.,

இறைவனை அடைவதற்கு அன்பர் பின்பற்றிய வழிகளை நான்காக பிரித்துக் கூறுவர். அவை, நன்மகன்மை நெறி (சற்புத்திர மார்க்கம்), தொண்டு நெறி (தாச மார்க்கம்), தோழமை நெறி (சக மார்க்கம்), மெய்ம்மை நெறி (சன்மார்க்கம்) என்பனவாகும்.

இறைவனைத் தந்தையாகவும், தம்மை மகனாகவும் பாவித்து அன்பு பாராட்டி நெருங்குதல் நன்மகன்மை நெறி. இது சம்பந்தர் பின்பற்றிய வழியாகும். இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தொண்டனாகவும் பாவித்துத் தொழில் புரிதல் தொண்டுநெறி, இது, நாவுக்கரசர் நாடியது. இறைவனைத் தோழனாகக் கருதி உரிமை பாராட்டி அணுகுதல் தோழமை நெறி, இது. சுந்தரர் பின்பற்றியது. இறைவனை, ஞானாசிரியனாகக் (குருவாக) கொண்டு, அவனுடைய மெய்யுரை வழியில் செல்வது மெய்ம்மை நெறி. இது மாணிக்கவாசகர் பின்பற்றியது.

பிரமபுரம், வேணுபுரம், புகலி ,வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், புறவம், சண்பை, காழிபுரம், கொச்சைவயம், கழுமலம், சிரபுரம் என பன்னிரு திருப்பெயர்கள் கொண்ட சீர்காழியில், சிவபாத இருதயர், பகவதியார் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் சம்பந்தர்.

வழக்கம் போல கோயிற் குளத்தில் குளிக்கச் சென்ற சிவபாத இருதயர், தம் மூன்று வயதுக் குழந்தையையும் உடன் அழைத்துச் சென்றார். குழந்தையைக் குளக் கரையில் அமர்த்தி விட்டு, நீருள் மூழ்கி மந்திரங்கள் சொல்லிக் கொண்டிருந்தார். குளக் கரையில் இருந்த குழந்தை பசியால் அழுதது. தந்தையார், தன்னைத் தனியே விட்டுச் சென்ற ஏக்கம் ஒருபுறம் சேர்ந்து கொண்டது. அக்குழந்தைக்கு அழுகை அதிகமாயிற்று. அழுகையை செவியுற்ற, சீர்காழிப் பரமனும், பார்வதிதேவியும் அவண் வந்தனர். பார்வதி தேவியார், பொற்கிண்ணத்தில் பால் சுரந்து ஞானத்தைக் கலந்து குழந்தைக்கு அளித்துப் பசியாற்றி மறைந்தனர்.குளித்து வந்த தந்தை, வாயில் பால் ஒழுக அமர்ந்திருந்த குழந்தையை நோக்கி, 'யாரிடம் பாலுண்டாய்' என்று அதட்டினார். மூவாண்டு முடியாத அக் குழந்தை உடனே

'தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்,
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே''

என்ற பாடலைப் பாடினார்.


தோடு அணிந்த செவியினையுடையவன். இடப வாகனத்தில் ஏறியவன். ஒப்பற்ற தூய்மையான பிறைநிலவைச் சூடியவன். சுடுகாட்டிலே விளங்குகின்ற திருநீற்றினைத் தன் திருமேனியில் தரித்தவன். என் உள்ளத்தை யானறியாபலே கவர்ந்த கள்வன். அழகிய இதழ்களைக் கொண்ட தாமரையில் இருப்பவனாகிய நான்முகன் முன்பு தன்னை வணங்கிப் போற்ற அவனுக்கு அருள் செய்த பெருமையுடையவனும், பிரமபுரத்தில் சீர்காழியில்! விரும்பித் தங்கியவனும் ஆகிய பெருமானாகிய சிவபெருமான் என்று போற்றினார் சம்பந்தர்.

இவ்வாறு பிள்ளைப் பருவத்திலேயே அம்மையப்பரால் ஆட்கொள்ளப் பெற்றமையால், 'ஆளுடைய பிள்ளையார்' எனவும், சிவஞானத் தொடர்பு பெற்றமையால், 'திருஞான சம்பந்தர்' எனவும் அப்பிள்ளை அன்று முதல் வழங்கப் பெற்றார்.

சைவத் திருமுறைகள் பன்னிரெண்டில், முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடியவையாகும். தற்போது இவர் பாடிய பதிகங்களுள் 374 திருப்பதிகங்கள் பயின்று வருகின்றன.

## பதிக அமைப்பு

இவர் பாடிய பதிகங்கள் பெரும்பாலும் பதினொரு பாடல்கள் கொண்டவை. அவற்றுள் பொது அமைப்பு ஒன்றை காணலாம். ஒவ்வொரு பதிகத்திலும் முதல் ஏழு பாடல்களில் இறைவனின் தோற்றப் பொலிவு, அருள் புரியும் தன்மை போன்றவை குறிப்பிடப்பட்டிருக்கும். எட்டாவது பாடலில் இராவணனுடைய வலிமையை அடக்கிச் சிவபெருமான் அருள்புரிந்தமை கூறப்படும். ஒன்பதாம் பாடலில் பிரமனுக்கும் திருமாலுக்கும் அரியவராகச் சிவபெருமான் நின்றமை கூறப்படும். பத்தாம் பாடலில் பௌத்தரும் சமணரும்



ஆகிய புற சமயத்தாரைக் கண்டித்தல் காணப்படும். பதினோராம் பாடலில், பாடல் பாடியவரின் பெயர், அப்பதிகத்தை ஓதினால் பெறக் கூடிய பயன் சொலலப்படும். இப்பதினொன்றாம் பாடல் திருக்கடைக் காப்பு எனப்படும்.

## இறைவனின் தோற்றமும் அருளும்

''முறைப்படி பூசை செய்துவரும் சிவனடியார்களோடு இருக்கும் அடியார்கள் பலரும், அழகிய மலர்களை அர்க்கிய நீருடன் சொரிந்து ஒரே குரலில் வேத மந்திரங்களைச் சொல்லி நிற்க, அந்நிலையில் மற்ற அன்பர்கள் வணங்கி அவன்போற்றுகின்ற இறைவன் சிவபெருமான். உயர்ந்த சடைமுடியில் ஊமத்தம் பூவினைச் சூடியவன். திருவலிதாயத்தில் விளங்கித் தோன்றுகின்றவன். எனவே, அத் திருவலிதாயத்தை உள்ளத்தில் வைத்த அடியார்களை மேல் வினைகளால் வரும் துன்பமும் பிறவிகளால் வரும் துன்பமும் சேரமாட்டா' என்ற கருத்து அமைய நம் சம்பந்தர் பாடியுள்ள பாடல் பின் வருமாறு:

''பத்தராடுபல ரும்பொலியம்மல
ரங்கைப்புனல்தூவி
ஒத்தசொல்லி யுலகத்தவர்தாம்தொழு
தேத்தயுயர்சென்னி
மத்தம் வைத்தபெரு மான்பிரியாதுறை
கின்றவலிதாயம்
சித்தம் வைத்தஅடி யாரவர்மேல்அடையா
யாமற்றிடர்நோயே''

## இராவணன் செருக்கழித்தமை

'யான் என்னும் செருக்குற்ற இராவணன். கயிலைமலையைக்கையினால் பெயர்த்தெடுக்க முற்பட்டபோது, இறைவன் தம் காற்பெருவிரலையூன்றி அவனுடைய இருபது கைகளையும் நெரித்து அவனது அச்செருக்கினை அடக்கினார். தனது ஆணவம் அடங்கிய இராவணன் 'சாமகானம்' பாடித் தம்மை வழிபட்டபோது, நீண்ட வாழ்நாளும், சிறந்த போர்வாளும் அவனுக்கு வழங்கி அருள் செய்தார். இந்தச் செய்தி.

''தென்னிலங்கையரை யன்வரைபற்றி
யெடுத்தான்முடி திண்தோள்,
தன்னிலங்குவிர லானெரிவித்திசை
கேட்டன்றருள் செய்த
மின்னிலங்கு சடையான்.''

என்ற பாடல் வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது காண்க.

## திருக்கடைக் காப்பு

வண்டுகள் தங்கும் மணமிக்க சோலைகள் வளரும் தலம் திருவலிதாயம். அங்கு உறையும் இறைவன் அண்டங்கள் தோறும் தங்கி வாழ்பவன். தாழை பொருந்திய கடற்கரைநாடாகிய சீர்காழி ஞானசம்பந்தன் கூறிய இப்பத்துப் பாடல்களையும் மனத்துட் கொண்டு இசை

யாகப் பாட வல்லவர்கள் சுவர்க்கத்திலும் உயர்ந்த வீடு பெறுவார்கள்.

''வண்டுவைகும்மண மல்கியசோலை வளரும் வலிநாயத்
தண்டவாணனடி யுள்குதலால்அருள் மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற் காழியுள்ஞானசம்பந்தன் தமிழ்பத்தும்
கொண்டு வைகியிசை பாடவல்லார்குளிர் வானத்துயர்வாரே'

## திரிபுரம் எரித்தமை

திருஞானசம்பந்தரின் பாடல்களில் இறைவனின் ஆற்றல் பல பாடல்களில் விளக்கப்படுகிறது. தக்கன் செய்த யாகத்தினை அழித்தல், தாருகாவனத்து முனிவர்கள் செய்த யாகத்தை அழித்தல, மன்மதனை எரித்தல் ஆகிய செய்திகளை ஆங்காங்கே குறிப்பிடுகின்றார்.

தாருகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்கள் முறையே பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் கோட்டைகள் அமைத்து, மற்றவர்களுக்குத் துன்பஞ் செய்தனர். தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி சிவபெருமான் அவ்வசுரர்களை அழிக்க புறப்பட்டார். பூமியைத் தேராகவும், சூரியசந்திரர் களைச் சக்கரங்களாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைத் தேரோட்டியாகவும், மேருமலையை வில்லாகவும், வாசுகிப் பாம்பை நாணாகவும், திருமாலை அம்பாகவும் அக்கினியை அம்பின் நுனியாகவும், வாயுவை அம்பின் பின் இறகுகளாகவும் கொண்டுஅசுரர் களின் முன்னே சென்றார். அசுரரை அழிப்பதில் தத்தம் பங்கே பெரிதென தேவர்கள் தனித் தனியே செருக்குற்றனர். எனவே, சிவபெருமான் தம் நகைப்பினால் திரிபுரங்களை அழித்தார். தேவர்கள் செருக்கையும்அடக்கினார், இறைவனின் இவ்வாற்றல்நிலையை சம்பந்தர்

''பெரியமேருவரை யேசிலையாமலை வுற்றாயின் என்றும்
எரியவெய்த வொருவன்'' என்றும்

''அடையார் தம் அரண்மூன்றும் சீரின்மல்கு மலையே சிலையாக முனிந்தான்'' என்றும்

திரிபுரம், எரித்தமைக்கு தத்துவப் பொருள் கூறுவார் திருமூலர், ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்று மலங்கள் முறையே பொன், வெள்ளி, இரும்பு கோட்டைகளாக உருவகம் செய்யப்பட்டன என்றும், மும்மலங்களைச் சிவபெருமான் ஒருவரே அழிக்க வல்லவர் என்பதனை இத் திரிபுர எரிப்பு உணர்த்திற்று என்றும் திருமூலர் திருமந்திரத்தில் கூறுகின்றார். ''முப்புரமாவது மும்மல காரியம்'' என்பது திருமந்திரத் தொடர்.

## சிரத்தை வேண்டும்

**உறுதியுடன் இரு**

**அதற்கு மேலாகத் தூய்மையாகவும்**

**முழு அளவில் சிரத்தை**

**உள்ளவனாகவும் இரு . . .**

—சுவாமி விவேகானந்தர்

## ஆற்றிய அற்புதங்கள்

ஞானசம்பந்தர் தம் தந்தையின் தோளில் அமர்ந்து இறைவனுறையும் இடங்களுக்கெல்லாம் சென்று, கைத்தாளமிட்டுப் பாடினார். இவ்வாறு 'திருக்கோலக்கா' என்ற தலத்தில் பாடியபோது இறைவன் தோன்றி 'பொற்றாளம்' கொடுக்க, உமையவள் அதற்கு ஓசை தர சம்பந்தர்அதனைப் பெற்றார். 'திருநெல்வாயில் அரத்துறையில் முத்துப் பல்லக்கும் திருப்பட்டீசுரத்தில் முத்துப்பந்தரும், திருவாவடுதுறையில் பொற்கிழியும், திருவீழிமிழலையில் படிக்காசும் பெற்றார்.

உருவத்தால் சிறிதாகத் தோற்றமளித்த சம்பந்தர் உள்ளத்தில் ஞானம் பெற்றதால் உரைப்பதற்கரிய அற்புதங்கள் பல ஆற்றினார். திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லிமழவன் மகள் 'முயலகன்' என்ற நோயால் வாடிய போது அதனைத் தீர்த்தார். திருக்கொடி மாடச் செங்குன்றூரில் அடியார்தம் குளிர் நோயைப் போக்கினார். திருமருகலில் பாம்பு தீண்டிய வணிகனைக் காப்பாற்றினார். திருமறைக் காட்டில் அப்பர் திறக்கப் பாடிய கதவைஇவர்மூடப்பாடினார். கூன்பாண்டியனது வெப்பு நோயைக் குணப்படுத்தினார். வைகை ஆற்றில் தம் பதிகத்தை (ஓலைச்சுவடி) நீரை எதிர்த்து வரச்செய்தார். காவிரியாற்றில் ஓடம் தானே இயங்கச் செய்தார். மயிலாப்பூரில் பூம்பாவையை உயிர்ப்பித்தார். திருவோத்தூரில் ஆண்பனையை பெண்பனையாக்கினார்.

## அருட்சோதியில் கலத்தல்

ஞானசம்பந்தர் 16 ஆண்டு காலமே வாழ்ந்தார். 16-வது வயதில் திருமணம் நடந்த போது, தீயை வலம் வரும் சமயத்தில் திருநல்லூரில் உள்ள 'பெருமணம்' என்ற கோயிலில் அடைந்து அங்குள்ள இறைவனுடன் கலந்தார்.

# தெய்வச் சேக்கிழாரின் பெருமை

மு. கிருட்டிணன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

சேக்கிழார் பெருமான் தெய்வச் சேக்கிழார் என்று விளங்கி வருவதே அவர் பெருமைக்குச் சான்று. இவர் இயற்றியது அருட்செல்வர்களின் வரலாறான திருத்தொண்டர் புராணம் என்ற நூல். அவரே இதை மாக்கதை என்று கூறியுள்ளார். இந்நூலில் செப்பலுற்ற பொருள் சிறப்புடையது என்றும் மெய்ப் பொருளுக்கு உரியார் மேன்மையாகக் கொள்வர் என்றும் அளவிலா அடியார் புகழ் கூறியுள்ளேன் என்றும் மேலும் கூறியுள்ளார். மற்றொரு காரணம் இந்நூலை இறைவன் திருவருளாசி பெற்று சிவபெருமானே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார் பெருமான்பாடியுள்ளார். இந்நூலை முடித்த பிறகு சிவபெருமான் அசரீரி வாக்கின்படி ஓராண்டு காலம் அரசன் அநபாய சோழன்,சிற்றரசர்கள் அருளாளர்கள் புலவர்கள், பொது மக்கள் முன்பு விளக்கம் கூறி அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது. நூலில் விவரிக்கப்பட்டுள்ள வரலாறுகள் எல்லாம் இறைவன் திருவருளால் உணர்ந்து எழுதப்பட்டுள்ளன. ஊர்தோறும் சென்று தகவல்களைச் சேகரித்து நூலை எழுதினார் என்பதற்குச் சான்று இல்லை. திருமலைச் சிறப்பை நேரில் கண்ட துபோல் விவரித்துள்ளார். அவர் கயிலைக்குச் சென்றிருந்ததாக நமக்கு வரலாறு இல்லை. நமது காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன் கயிலைச் சென்று பார்த்தபோது சேக்கிழாரின் பாடல் படியே இருந்த கயிலை காட்சியைக் கண்டு பெரிதும் வியந்து போனார் என்று அவர் கூறி வருவது நமக்கெல்லாம் புல்லரிப்பு ஏற்படுத்துவதுடன் நாமும் அக்காட்சியை காண வேண்டுமென்ற அவாவையும் ஏற்படுத்துகிறது.

சேக்கிழார் நூல் முடித்த உடனே அநபாய சோழன் தில்லை வந்து அவரையும் அவர் நூலையும் யானை மீது ஏற்றி புலவர் பெருமானார்க்கு தன் கரத்தால் வெண்சாமரை வீசி பெருமை சேர்த்தான். அரங்கேற்றம் முடிந்த பிறகு அரசன் சேக்கிழாருக்குத் தொண்டர் சீர் பரவுவார் என்ற பட்டத்தினையும் அளித்து திருத்தொண்டர் புராணத்தை சைவத் திருமுறைகள் பதினொன்றுடன் பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்த்து செப்பேடு செய்து பெருமை சேர்த்தான். அது முதல் இப்புராணமும் தோத்திர நூலாக-வழிபாட்டு நூலாக இருந்து வருகிறது. சிவன் கோயில்களில் பூசைக் காலங்களில் தவறாமல் விண்ணப்பம் செய்யப்படும் பஞ்சபுராணப் பாடல்களில் பெரியபுராணப் பாடலும் ஒன்று. இப்பெரிய புராணம் பாடல்தான் ஐந்தாவது. நாள் தோறும் சிவபெருமான் செவிமடுக்கும் திருமுறைப் பாடல்களில் பெரிய புராணப்பாடல்களும் உள்ளன என்பதே சேக்கிழாரின் தெய்வத் தன்மைக்குப் பெருமைக்கும் நிலைத்தசான்றாகும்.

கொற்றவன் குடி உபாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த சேக்கிழார் சுவாமிகள் புராணம், திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத்தமிழ் ஆகிய இரண்டும் சேக்கிழாரையும் அவர் நூலையும் பெரிதும் புகழ்ந்து பாடப் பெற்றவை.

சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத் தமிழில் தாலப்பருவம் எட்டாவது பாடலில் 'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியகவி வலவ'' என்று மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியது ஒன்றே சேக்கிழாரின் பக்தி நலனை உலகறியச்செய்ய வல்லது. இப்பத்தியே நூலெங்கும் பரவியுள்ளதை அறியலாம். அடுத்து பண்பாட்டினைச் சிறப்பித்துக் காட்டியுள்ளார். பக்தியும் பண்பாடும் கலந்து பரவியுள்ளதை எங்கும் காணலாம்.

இப்புராணம் சேர, சோழ பாண்டிய தொண்டை நாடுகளைப் பக்தியால் இணைத்து ஒன்றுபடுத்தி சைவ நெறியை சிறந்தோங்கச் செய்துள்ளது. அறுபான் மும்மை நாயன்மார்கள் ஒன்பான் தொகை அடியார்களின் வாழ்கதை வரலாற்றை விவரிப்பதோடு அக்காலத்து வாழ்ந்த மன்னர், படைத்தலைவர்கள், போர்கள், வரலாற்று நிகழ்ச்சிகள் கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரை தொடங்கி நடந்துள்ள சரித்திர வரலாறுகள் பரவியிருந்த மதங்கள். மக்களிடையே நடைமுறையில் இருந்த சமுதாயநிலை ஆகியவற்றையும் விளக்கியுள்ளார். மேலும் இசை, ஆடல், பாடல்,ஓவியம், சிற்பம் கட்டடம், மருத்துவம் ஆகிய கலைகள் விளக்கப்பட்டுள்ளன. முப்பொருள் பற்றிய சித்தாந்தக் கருத்துக்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம், வினை, சலம், பிறப்பு,



முத்தி ஆகியவை பற்றிய கருத்துக்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

தேவாரங்களுக்கு விரிவுரை போலப் பல பாடல்கள் பெரியபுராணத்தில்அமைந்துள்ளன. சில பதிகங்கள் பாடப் பெற்ற சந்தத்திலேயே அப்பதிகங்களின் வரலாறு இந்நூலில் சொல்லப் பெற்றுள்ளது. சில அற்புதங்கள் நிகழ்ந்தமைக்குரிய காரணங்களும் அமைவு பெறக் கூறப் பெற்றுள்ளன.

கோவை திரு சி.கே. சுப்பிரமணிய முதலியார் பெரிய புராணம் முழுதும் சிவபெருமான் ஆசிரியர் வாக்கின் மூலம் வெளிப்படுத்திய அருள் வாக்காகிய வேதமேயாம் என்று அறுதியிட்டு கூறியுள்ளார்.

ஒரு நூலின் தொடக்கப் பாடல் வாழ்த்து, வணக்கம் வருபொருள் உரைத்தல் என்னும் மூன்று பொருள்களையும் உணர்த்துதல் வேண்டும் என்பது மரபு. இம்மூன்றும் உலகெலாம் என்று தொடங்கும் முதல் பாட்டின் இறுதி அடியில் குறிக்கப் பெற்றுள்ளன. 'வணங்குவாம்' என்பதனால்வணக்கமும்'வாழ்த்தி' என்பதனால் வாழ்த்தும் 'மலர் சிலம்படி' என்பதனால் வருபொருள் உரைத்தலும் குறிக்கப் பெற்றுள்ளன.

மகா வித்துவான் மீனாட்சி சுந்தரப் பிள்ளை அவர்கள் தமது பிள்ளைத் தமிழில் சேக்கிழார் பாடலில் பொதிந்துள்ள சில நுண் பொருட்களை வெளிப்படுத்தியுள்ளார். அவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

இறைவனை அடைதற்குரிய வழிகள் நான்கு என்று நமது சைவ சமய குரவர்கள் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார்,மாணிக்க வாசகர் வாழ்ந்து காட்டியுள்ளனர். அவை சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம் சகமார்க்கம், ஞானமார்க்கம். இதை முன்கூட்டியே அறிவிக்க தமது முதற் பாடலில் நான்கு சீர்களை அமைத்து சேக்கிழார் பாடியுள்ளதாக பிள்ளைஅவர்கள் தமது பாயிரப் பாடலின் கடைசி அடியில் ''நால்சீரில் நால்நெறி விளக்கி ஒளிர் சேக்கிழார் நற்றமிழ்க் கவிதழையவே'' என்று கூறியுள்ளார். 'உலகெலாம்' என்று தொடங்கும் முதல்பாடலில் ஒவ்வொரு அடியிலும் நான்கு சீர்கள் உள்ளன.

குரு வணக்கச் செய்யுளில் சேக்கிழாரை முருகப் பெருமானாகவும், சிவ பெருமானாகவும் திகழ்கிறார் என்று சித்தரித்துள்ளார்.

சேக்கிழார் சம்பிரதாய முறைகளை நன்கு உணர்ந்தவர். இதனை இவரது புராணத்துள் பல இடங்களில் காணலாம் என்று ப்ள்ளை

அவர்கள் காப்புப் பருவ பாட்டில் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக திண்ணனார் கன்னி வேட்டைக்குப் போகுமுன் தேவராட்டி திண்ணனாருக்கு எந்தெந்த வகையில் அலங்கரித்து, வாழ்த்தி அனுப்பினாள் என்பதை 'கானல் வா' என்று தொடங்கும் பாட்டில் விவரித்துள்ளார்.

கலைமலி பெரும்புலவர் கைக்குவிக்க, கலைக்கன்னி (சரசுவதி) நின்று ஏவல் கேட்க, கனகசபையார் முதல் அளித்தருள, அளவா மகத்துவம் அடைந்திருந்தும் அலைமலி சுணங்கன் (நாய்) ஒப்பேன் என்று உரைத்தருளியுள்ளாரே என்று வியப்புடன் பிள்ளை அவர்கள் பாடியுள்ளார். 'சேக்கிழான் அடி சென்னி இருத்துவாம்' என்று மாதவ சிவஞான சுவாமிகளும் 'சேக்கிழார் அடி போற்றி' என்று உமாபதி சிவாச்சாரியாரும்கூறியிருக்கிறார்கள். இவ்விருவரும் பெரும் புலவர்கள் என்பது உலகறிந்த உண்மை.

சேக்கிழார், மூவர் முதலிகளின் திருவாக்கின் உண்மைப் பொருளை உணர்த்துவதில் வல்லுநர். திருஞான சம்பந்தரின் முதல் பாடல் 'தோடுடைய செவியன்' என்று தொடங்குகிறது. இப்பாடலின் உள்பொருள் இன்னது என்று சேக்கிழார்.

''எல்லையிலா மறைமுதமெய் உடன் எடுத்த
எழுதுமறை
மல்லல் நெடும் தமிழால் இம்மாநிலத்தோர்க்
குரை சிறப்ப
பல்லுயிரும் களிகூரத்தம் பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச் செவியைச்
சிறப்பித்து''

என்று பாடி அறிவித்துள்ளார். இதனால் 'வேதத் தமிழ்க்கண் உள்ள மெய்ம்மையை விரித்துத் தெரித்தருள் செய் குன்றையூர் வேந்து' என்று பிள்ளை அவர்கள் பாடியுள்ளார்கள்.

சீவக சிந்தாமணியில் ஈடுபட்டிருந்த நிலையினை மாற்றி அநபாயச் சோழனை சிவனடியார்களின் வரலாற்றில் ஈடுபடும்படி செய்திருப்பது சேக்கிழாரின் நாவன்மையே என்று வம்பறாவரிவண்டு பாடலில 'யாப்புற விரித்த நாவலர் பிரானை' என்று பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இதனை உமாபதி சிவமும் புகழ்ந்துள்ளார்.

பிரமன் உயிர்களைப் படைக்கும் தெய்வம் உலகில் எல்லாச் சாதிகளையும் படைப்பவன். சேக்கிழாரும் பெரிய புராணத்தில பல சாதியில் தோன்றிய பெரியார்களின் வரலாற்றையும் பாடியுள்ளார். பிரமன் பல சாதியினரை மட்டும் படைத்தான். ஆனால் சேக்கிழாரோ பல சாதிகளைப் பற்றிக் கூறுவதோடு அந்தந்த சாதிகளின் குறி குணம், செய்கை, குடி, இயல்பு, மொழி, உணவு ஆகிய இவற்றை எல்லாம் அறிந்து இவர் பாடல்களில் விவரித்துள்ளார். இதனால்தான் பிள்ளை அவர்கள் 'செப்பரிய ஆய அவ்வச்சாதி குறி குணம் செய்கை குடிகொள்ளும் இயல்பு வெய்ய மொழி உணவு முன் விரித்தெலாம் அறியவலர் மெய்அறிஞர் எனல் விளக்கி' எனப் பாடியுள்ளார்.

தொண்டை நாட்டின் வளத்தை சேக்கிழார் ஒருவரே கூறவல்லவர் என்று தென் தமிழும் வடமொழியும் கற்றுணர்ந்த சிவ ஞான முனிவர் போற்றியுள்ளார்.

வள்ளல்கள் இம்மையில் இன்பம் அடைதற்குரிய பொருள்களையே ஈயவல்லவர். ஆனால் சேக்கிழார் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயக்க வல்ல பெரிய புராணமாம் பெருஞ் செல்வத்தை உலகத்தவருக்கு ஈந்தமையின் 'பெருவள்ளல்' என்று பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சேக்கிழாரது மனம் வாக்கு காயம் ஆகிய இம்மூன்றும் தூயன. இவற்றின் துணை கொண்டுதான அநபாய சோழனின்மனத்தை மாற்ற முடிந்தது. இவர் தீயனவற்றைத் தம் வாயால் கூறார். அமங்கலத்தையும் மங்கலமாகவே சொல்ல வல்லவர். கொடூரமான நிகழ்ச்சிகளையும் நாகரீகமாகவே கூறுவர். சிலவற்றை வெளிப்படையாகக் கூறாமல் மறைமுகமாகவே செப்புவார். இவற்றை இவரது நூல் முற்றிலும் காணலாம், இத்தன்மைகளை மெய்ப்பொருள் நாயனார் சிறுத்தொண்டர், திருநீலகண்டர் வரலாறுகளில் காணலாம்.

திருபிள்ளை அவர்கள் சேக்கிழாரைவானவன்என்றும், ஆன்றதோன்றல் என்றும் சிறப்பித்துள்ளார். வானவர் என்ற சொல்லுக்கு மேலானவர் என்று பொருள் கொள்ளலாம், தோன்றல் என்னும் சொல் தமிழில் விகுதி பெறாத ஆண்பால் சிறப்புச் சொல். சேக்கிழார் ஆண்களுள் பெருஞ்சிறப்புடைமையின் தோன்றல் எனப்பட்டார்.

திருபிள்ளை அவர்கள் தம் பிள்ளைத் தமிழில் பாடல்தோறும் சேக்கிழாரின் அருமை பெருமைகளைக் கூறியுள்ளார். இவற்றைத் தொகுக்கின் விரியும் என்று அஞ்சி நிறைவு செய்கிறேன்.

சைவ ஆலயங்களில் அறுபான் மும்மை அடியார்களின் வரிசையில் வைத்து சேக்கிழார் பூசிக்கப்படுவதும், இவரது நூல்சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாக வைத்து போற்றப்படுவதும், அநபாயச் சோழமன்னனே இவருக்குக் கவரி வீசினான் என்பதாலும் சேக்கிழாரன் பெருமையை அளவிட்டுக் கூற இயலாது என்பதை உணர்த்தும். சேக்கிழார் அடிகளை என்றும் தலைமேல் சார்த்தி வணங்குவோமாக.

'தில்லை வாழ் அந்தணரே முதலாகச் சீர்
படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகை
அடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராண கதை, உலகறிய
விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார்
அடிபோற்றி',

# திருக்கோயில்களின் அமைப்பும் தத்துவமும்!

**ச. கா. பத்மநாபன், B.E., M.I.S.A.E.**
கண்காணிப்பு பொறியாளர், (வேளாண்மைப் பொறியியல்), சென்னை-600 018.

தென்னகத்தில் பல கோயில்கள் தொன்று தொட்டு விளங்கி வருகின்றன.

கோயில் பகுதிகள் எழும்பும் வரிசையினைக் காணும்போது, முதன் முதலில் கருவறையும், அர்த்த மண்டபம் நந்தியின் இருப்பிடமும், பலிபீடமும், கொடிமரமும், கோபுரமும் எழுந்தன. அதன் பிறகே சுற்றியுள்ள பிரகாரங்களும் பிரகார மண்டபங்களும், குளம் முதலியனவும் தோன்றின என்று காணலாம்.

கோபுரம் என்பது நுழைவாயிலைக் குறிக்கும். விமானம் என்பது கருவறைக் கட்டிடங்களை (அடி முதல் முடிவரை) குறிக்கும்.

ஒரு கோயிலை எடுத்துக் கொள்வோம். கோபுரமும் அதனை ஒட்டியுள்ள மதில் சுவர்களின் புறத்தே ஒரு சுற்று எல்லாக் கோயில்களிலும் அமைந்துள்ளன. கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் நீர்நிலை காணுகிறோம். அதில் நீராடியோ அல்லது கை, கால்களைச் சுத்தப்படுத்திக் கொண்டோ. உள்ளே நுழைந்வுடன் மகா மண்டபத்தினை அடைகிறோம். அந்த மகா மண்டபத்தில் பலதரப்பட்ட சிற்பங்களையும், தூண் சிற்பங்களையும் பார்வையிடுகிறோம்.. மகா மண்டபத்தினைக் கடந்து கருவறைக்கோபுரத்தைத் தாண்டியதும் ஒரு இருள் சூழ்ந்த முதல் சுற்று அமைந்துள்ளது. இங்கே காற்று அமுக்கமும், குளிர்ந்த சூழலும் இருப்பதைக் காண்கிறோம். பிறகு கருவறையின் உள்ளிருக்கும் இலிங்கத்திருமேனியைத் தரிசிக்கிறோம். இந்த அமைப்பினைத் தத்துவ அடிப்படையில் காணும்போது கோபுரம் பிருதிவி தத்துவத்தினையும், நீர்நிலை அப்புத் தத்துவத்தினையும், மகா மண்டபம் தேயுத் தத்துவத்தினையும், முதல் சுற்று வாயுத் தத்துவத்தினையும், கருவறையின் உள்ளிருக்கும் திருமேனி ஆகாச தத்துவத்தினையும் சுட்டிக்காட்டுவதாக கொள்ளல் வேண்டும்.

மேலும் திருக்கோயிலை நமது உடம்பிலுள்ள பஞ்சகோசங்களாகவும் கருதலாம். கோபுரமும், திருமதில்களும் அன்னமய கோசமாகவும், நீர்நிலை சுற்று பிராணமய கோசமாகவும், மகா மண்டபம் மனோமய கோசமாகவும், இருண்ட முதல் சுற்று விஞ்ஞானமய கோசமாகவும், அதனைக் கடந்து காணும் கருவறை ஆனந்தமய கோசமாகவும் காணலாம்.

சில கோயில்களின் அமைப்பு இங்கு குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக (1) திருவரங்கம் ரங்கநாதர் கோயிலும், (2) திருவாரூர் தியாகேசுவரர் கோயிலும், (3) மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலும், (4) குற்றாலத்தில் உள்ள திருக்குற்றாலநாதர் கோயிலும் கொண்டுள்ள அமைப்பை இங்குக் காணலாம்.

(1) திருவரங்கம் கோயிலின் அமைப்பே பிரணவாகாரம், விமானத்திலே நான்கு கலசங்கள்-நான்கும் நான்கு வேதம். மண்டபத்தின் அமைப்போ காயத்ரீ ரூபம், இந்த காயத்ரீ மண்டபம் ஒவ்வொன்றிலும் ஆறுவட்டத் தூண்களுடைய நான்கு வரிசைத்தூண்கள் இருக்கின்றன. இந்த இருபத்திநான்கு தூண்களும் காயத்ரீ மந்திரத்தின் இருபத்து நான்கு எழுத்துக்களையும் குறிக்கின்றன.

(2) திருவாரூரிலுள்ள தியாகேசுவரர் கோயிலின் பரப்பு ஐந்து வேலியாகவும், கமலாலயம் குளத்தின் பரப்பு ஐந்து வேலியாகவும் செங்கழுநீர் ஓடை பரப்பு ஐந்து வேலியாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(3) தாமரை மலரைப் போன்றமதுரை மாநகரின்சிறப்பினைப்பரிபாடலால் அறியலாம். மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலை மையமாகக் கொண்டு வீதிகள் சுற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஆடிவீதி, சித்திரை வீதி, மாசி வீதி, வெளி வீதி).

(3) குற்றாலத்தில் உள்ள திருக்குற்றாலநாதர் கோயில், பிற கோயில்களைப் போல சதுர வடிவமாக அல்லது நீண்ட சதுரமாக அமையாது சங்க வடிவமாக அமைந்துள்ளது ஒரு தனிப்பெருமையாகும். ஆதலால் இக்கோயிலுக்கு சங்கக்கோயிலென்றும், வீதிக்கு சங்க வீதியென்றும் பெயருண்டாயிற்று. சங்க வடிவம், மலை மேல் நின்று பார்க்க நன்றாய் தெரியும்.

# அனுமன் போற்றி...!

புலவரேறு வித்துவான் ஆ. ஜெ. இராமசாமி அவர்கள்

ஓம் அன்பே உருவாம் அனுமா! போற்றி
ஓம் அஞ்சனா தேவியின் அருமை நன்
மைந்தனாய் போற்றி!
அவனியிற் போந்தொளிர் அருளே போற்றி!
எல்லையில் ஈசனார் அமிசத்தொரு நல்
வாயுவின் சேயாய் வந்தோய் போற்றி
தினகரனையொரு தீங்கனியென்றே
பறிக்கப் பாய்ந்த பலவான் போற்றி
நல்லொளி நல்கி ஞாலம் புரக்கும்
கதிரவன் தன்னிடம் கலை பலகற்றும்
நவவியாகரணமும் நன்கு பயின்றோய்!
சொல்லின் செல்வா! சுக்கிரீவன் என்னும்
மன்னற்கேற்ற மாண்புறு அமைச்சாய்
விளங்கிய வித்தகா! விமலா போற்றி!
இராமபிரானின் இன்னுயிர்த் துணைவனாய்
இலங்கைக் கேகி இராவணன் குலமாம்
பூண்டை அழித்துப் புகலருங்கற்பிற்
சிறந்த தேவிநற் சீதா பிராட்டியின்
சீரிய பண்பைச் சிந்தையில் தெளிந்து
ஆழியை நல்கி அல்லல் களைந்து அவள்
ஆருயிர் நிலைக்க அருந்தொண்டாற்றிய
அறிஞனே! ஆஞ்சநேயா போற்றி!
இராம இராம என்னும் தாரக
மந்திரம் மறவாது அல்லும் பகலும்
யேத்தி யேத்தி எவையும் செயவல
ஆற்றல் மிக்கொளிர் அரிமா போற்றி!
மாசஞ்சீவி மலையைக் கொணர்ந்து
மன்னுயிர்க் காத்த மாமணி போற்றி!
சீதையும் இராமனும் சிந்தித்தளித்த
மாமுத்து மாலையை மகிழ்வோடேற்று
நற்சிரஞ்சீவி எனதளிர் நவிலரும்
பொற்குன்றனையோய் பொன்னடி போற்றி!
என்றும் மணியாய் இருப்போய் போற்றி
இந்திர சித்துவும் இறும்பூதெய்த
ஈடிலாப் போர்புரி ஏந்தலே போற்றி!
இலங்கை எரியுணச் செய்தோய் போற்றி!
பஞ்சசேனாதிபதிகளை வென்றாய்!
பாதக இராவணன் பதறிக்கதற
அக்க குமாரனோடு அரும்படை அழித்தாய்,
அசோகவனத்தொடு அரக்கரை அழித்த
அனுமா உன்றன் ஆற்றல் போற்றி!
புகழ் ஒருநாப் போதாதெம்பரும்
செம்மலே சேயோன் ஆற்றலுக்கு ஒப்பாம்
ஆற்றலும் அறிவும் உடையாய் போற்றி!
என்றும் துணையாய் இருப்பாய் போற்றி
உற்றவர்க்குறுதுணை ஆவாய் போற்றி
கற்றவர் போற்றுங் கலைஞனே போற்றி
அற்றவர்க் கருள்புரி அண்ணலே போற்றி
நற்குணக்கடலே! நலம் விளை கோவே!
அரியணை தாங்கும் அப்பா போற்றி!
பத்தியோடு உன்றன் பதமலர் போற்றும்
உத்தமர் அனைவரும் உயரிய அறம் பொருள்
இன்பமும் இம்மையிற் பெற்று மேலாம்
வீட்டையும் அடைய அருள்வாய் அமலா
அல்லல் இன்றி அனைவரும் நலமாய்
வாழ அருள் செய் வாயுவின் மைந்தா!
மாருதி என்னும் மாமணி போற்றி!
போற்றி போற்றிஉன் பொன்னடி போற்றி!
மாயப் பிறப்பும் மாய்ந்தொழிந்திடுமே
பசியும் பிணியும் பல்வகைநோயும்
பறந்திங் கோடும் பவனன் புதல்வன் .
ஐம்பொறி களுமே அடங்கி ஒடுங்கிடும்
பொல்லாங்கனைத்துமே பொடிப் பொடி
ஆகிடும்
புவனம் போற்றிடும் புண்ணியா புனிதா!
சாற்றுயர் சதுரா! போற்றிடும் புலவா
சீதா சமேதன் சேவடி பற்றும்
நாதா நாண்மலர்ப் பாதா நாளும்
ஏதம் சாராது இன்பாய் ஈண்டு
வாழப் போற்றுதும் வழிவழிசிறப்புறும்
வளம் பல நல்கி வாழ்வாங்கு வாழ
வரம் அளித்தருள்க வான் புகழ் மாநிதி!
அடியோமோடும் நின்னொடும் பிரிவின்றி
பல்லாண்டு வாழ்க வாழ்க வாழ்கவே!



# நம் நாட்டுச் சித்தர்கள்

டாக்டர் இரா. மாணிக்கவாசகம்
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி

## 6. இராமலிங்க சுவாமிகள்

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராதலின் இவரைப் பற்றி ஓரளவு தெளிவான வரலாறு கிடைக்கின்றது.

1823-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மருதூரில் இராமையா பிள்ளைக்கும், சின்னம்மைக்கும் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தவர். இராமலிங்கப் பரதேசி, திருவருட் பிரகாச வள்ளலார், கருங்குழி இராமலிங்கம், இராமலிங்கசுவாமி, சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை, கருங்குழி கணக்கன் முதலிய பல வேறு பெயர்களில் குறிக்கப்பெற்ற 'வள்ளலார்' என்ற சிறப்புப் பெயரோடு விளங்கிய இவர் தமது 3-ஆம் ஆண்டிலேயே தந்தையை இழந்தார். பின்னர் சென்னையில் தமது தமையனாரின் ஆதரவில் வளர்ந்தார். ஒன்பது வயதில் இறையருள் பெற்றார்.

'ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டுகொண்ட
அருட்கடலே என்னுள்ளத் தமர்ந்ததேவே
'தூண்டா விளக்கே திருப்பொதுவிற்
சோதிமணியே ஆறொருமூன்
றாண்டா வதிலே முன்னென்னையாண்டாய்'

எனவரும் அடிகள் சான்றாகும். பன்னிரண்டாம் வயதில் ஒரு மாற்றம் ஏற்பட்டது என்பதை மூன்று இடங்களில் குறிக்கின்றார். திருவொற்றியூர் சென்று தியாகேசரையும் வடிவுடைய மாணிக்கத்தையும் பாடி மகிழ்ந்தவர் தமது இருபத்திரண்டாவது வயது தொடங்கிச் சிதம்பரம் சென்று வரத் தலைப்பட்டார். இவரது திருமணம் பற்றிய பல்வேறு கதைகள் வழங்குகின்றன. எனினும் எவ்வித அகச்சான்றும் புறச்சான்றும் இல்லையாதலால் அக்கதைகளில் உண்மையின் கலப்பின் அளவு அறிய முடியவில்லை. சுந்தரர் பற்றிப்பாடும் பாடலில் ஒரே ஓர் இடத்தில் தமக்குத் திருமணம் ஆனது பற்றிய குறிப்பினைத் தருகிறார்.

'முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில்
கொண்டதுபோல்
என் மணத்தில் நீவந் திடாவிடினும்-
நின்கணத்தில்
ஒன்றும் ஒருகணம்வந் துற்றழைக்கில் செய்த
தன்றி
இன்னும் ஒருமணஞ் செய்வேன்'

என்பது அப்பாடல். சிதம்பரம் செல்வதற்கு முன்னர் பாடிய பாடல் ஆதலின் இவர் மணம் 1855-க்கு முன்னர் நடந்திருத்தல் வேண்டும் என்ற அளவில் மட்டுமே கூறுதல் கூடும்.

பார்வதிபுரம் என்ற பெயரோடு விளங்கிய வடலூரில் சன்மார்க்க தருமச்சாலை, சன்மார்க்க வேத பாடசாலை, சன்மார்க்க சங்கம் முதலியன அமைத்தார்.

இவரது பாடல்களில் தெய்வமணிமாலை கந்தர் சரணப் பத்து ஆகியவை 1851-ஆம் ஆண்டில் வெளிவந்தன. முதல் நான்கு திருமுறைகள் 1867-ஆம் ஆண்டிலும், ஐந்தாம் திருமுறை 1880-ஆம் ஆண்டிலும், ஆறாம் திருமுறை 1885-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

1874-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ஆம் தேதி மேட்டுக் குப்பம் என்னும் சிற்றூரில் தமது அறையில் தாளிட்டுக் கொண்டு மறைந்தார்.

1878-ஆம் ஆண்டு தென்னாற்காடு மாவட்ட ஆட்சி இதழில் ஜார் ஸ்டீன என்பவர் இவர் தம்மை மறைத்துக் கொண்டது பற்றிக் குறித்துள்ளார். இதுவே நமக்குக் கிடைக்கும் மிகப் பழமையான சான்றாகும்.

In 1874 he locked himself in a room (Still in Existence) in Mettukkuppam (Hamlet of Karrungtli) which he used for. Samathi or mystic meditation and instructed his disciples not to openit for some time. He was never seen since and this room is still locked'' என்பது அவரது குறிப்பு.

இவரை அடுத்து பிலிப்ஸ் என்பவரும் இதே கருத்தைச் கூறியுள்ளார். ''In 1874 he disappeared from his house and nothing clear is known about his death''. இது 1910-ஆம் ஆண்டு எழுதப் பெற்றது. எனவே மிகப் பழமையான இச்சான்றுகள் மூலம் அடிகளார் தம்முடம்பை மறைத்துக் கொண்டார் என்பது தெளிவாகிறது.

பொருள்களின் இயல்பறிந்த அறிவியல் அறிஞர்கள் அவற்றைத் தம் விஞ்ஞானக்கூடத்தில் உண்டாக்கியும், அவற்றின் வடிவத்தை மாற்றியும் வருவதை நாமறிவோம். இவ்வாறே பஞ்ச பூதத்தின் இயல்பறிந்தோர் அப்பூதத்தினால் ஆன எந்த வடிவமும் பெறுதல் இயலும்.

'அறிவுதந்தபேர் அறிவ போற்றிவான்
காற்றும் நீடழல் அதி ஐந்துநான்
காணக் காட்டிய கருத்த போற்றிவன்
கூற்று தைத்துநீத் தழிவிலா உருக்
கொள்ள வைத்தநின் கொள்கை போற்றியே'

'ஊன் செய்த மெய்யுப் உயிருப் உணர்வும் ஒளி
மயமாக்
கொன்செய வேபெற்றுக கொண்டேன்'
'ஊனஉடம்பே ஒளியுடம்பாய் ஓங்கிநிற்க
ஞான அமுதெனக்கு நலகியதே'
'மன்னுகின்ற பொன்வடிவும் மந்திரமாம்வடிவும்
வான்வடிவும் கொடுத்தெனக்கு
மணிமுடியுஞ்சூட்டி
பன்னுகின்றதொழில் ஐந்தும் செய்திட வே
பணிந்து'

இங்ஙனம் காணப்பெறும் அடிகளை, அடிகளார் தம் ஊன் உடலை மறைத்துக் கொண்டார் என்பது முற்றும் உண்மையே என்பதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

இவரது பாடல்களின் தொகுப்புமுறை தனிச் சிறப்புடன் கூடியதாகும். முதல் திருமுறையும் மூன்றாம் திருமுறையும் திருஒற்றியூர் பற்றிய பாடல்களைக் கொண்டன. இரண்டாம் திருமுறை பாதி திருஒற்றியூர் பற்றிய பாடல்களையும், பாதி தில்லை பற்றிய பாடல்களையும் கொண்டது. நான்காம் திருமுறையும், ஆறாம் திருமுறையும் சிதம்பரம் பற்றிய பாடல்களைக் கொண்டன. ஆறாம் திருமுறையை மூன்றாகப் பிரித்து முன் பகுதி சிதம்பரத்தில் பாடிய பாடல்களையும், இரண்டாம் பகுதி வடலூரில் பாடிய பாடல்களையும், மூன்றாம் பகுதி மேட்டுக்குப்பத்தில் தங்கியிருந்தபோது பாடிய பாடல்களையும் கொண்டன எனலாம். ஐந்தாம் திருமுறை முழுவதும் முருகனைப் பற்றிய பாடல் திரட்டாகும்.

'தாதாதா தாதாதா எழுதாக்குறைக்கென்
செய்குதுமியாம்
ஓதா தவமே யுநெஞ்சே-மீதாத்
ததிதி என மயிலிற் நானாடி நாளும்
ததிதி தரும் தணிகைத்தே'

இப்பாடல், அடிகளாரது பாடல்கள் பக்திச் சுவை மட்டுமின்றி சொல், பொருள் நயம் நிறைந்த கவிச் சுவையுடையன என்பதற்கு ஒரு சான்றாகும். மேற் தோற்றத்திற்குக் கடுமையானதாக விளங்கினாலும், கூர்ந்து நோக்கின் இதன் எளிமையும் இனிமையும் விளங்கும். முதல் வரியில் முதல் சீரில் மூன்று தகர நெடிலும் இரண்டாம் சீரில் மூன்று தகர நெடிலும் மூன்றாம் சீரில் ஒன்றும் உள்ளன. எனவே 'எழுதா'க் குறைக்கென் செய்தும் எனவரும் இறுதி அடியில் மூன்று 'தி' கரம் வருகின்றன. சேர்த்துப் படித்தால் 'முத்தி' தரும் தணிகைத்தே எனவரும். இரண்டாவதாக வேறு ஒரு பாடல் கீழ்வரும்.

'தகரவரிக் கூந்தலர் காமாதிமுன்னீராடும்
தகரவரி நாலைந்தும் சாடும் தகரவரி
மூவொற்றியூர் பதங்கள் மூன்றும் அங்கை
யேந்தும் ஒரு
சேவொற்றி யூரான் சீர் செப்பு'

இப்பாடலும் கடுமையான தோற்றத்தோடு காட்சியளிக்கிறது.

தகரம்-மைச்சாந்து, வரி-சுருள் வரிக்கூந்தலர் என்பது சுருளானமுடியை உடைய பெண்கள், காமாதி முன்னீராடும்-அவர்கள்மாட்டு ஒழுகும் காமம் முதலாய தவறிய ஒழுக்கம், தகரவரி-தகரவரிசையில்

நாலைந்து-நான்காவது, எழுத்தும் ஐந்தாவது எழுத்தும் த, தா, தி, தீ, து, தூ, எனவரும் வரிசையில் தீ, து இரண்டும் சேர, தீது.

சாடும்-ஒழிக்கின்ற (யார்)?
தகரவரிமூவொற்றி ஊர்பதம்-மூன்றாவது
எழுத்து-தி (அதன் மேல் ஏறி)
திறி-மூங்கில், வட்டம், தேர்உருள், ஆழி,
வெற்பு என்பது நிகண்டு.
மூங்கில்-குழல், ஆழி-சக்கரம் வெற்பு-
கோவர்த்தனம்
மூன்றும் அங்கையில் ஏந்தும்- மேற்கண்
மூன்றையும் கையில் ஏந்தும் திருமால்.
சே வொற்றி-சே-காளை திருமாலாகிய காளை
வாகனன் ஒற்றியூரான்.
சீர் செப்பு-சிறப்பினைப் பாடுவாயாக மனமே.

'மைச்சாந்து பூசிய சுருளான முடியையுடைய பெண்மாட்டுத் தவறான ஒழுக்க

மாகிய தீயதைச் சாடும். மூங்கில், ஆழி,வெற்பு இம்மூன்றையும்அங்கையில் தாங்கிய திருமால் ஆகிய காளைவாகனம் மீதுவரும் திருவொற்றி யூரான், சீரினைப் பாடு ' என்பது இப்பாட லின் கருத்தாம்.

'அருவேல் உருவன் றுருவேல் அருவன்று
இருவேறும் ஒன்றிற் கிசையா'

'அருஉருவங் கடந்து நிறைந் தானந்தப்
பரவெளியாய்'

'அருவமு முருவமு மாகி நின்றுமவ்
வருவமு முருவமு மகன்று நின்றானை

'அருவமோ உருவா ரூபம்
ஆனதோ அன்றுநின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தர்'

இவ்வாறு சான்றோர் பலரும் இறைவனை அரு உருவானவனாகக் கூறும் மரபினைப் பண்டு தொட்டுப் பார்க்கின்றோம்.

இறைவன் அரு உருவானவன் என்னும் தத்துவத்தை விளக்கும் வகையில் சோதியை வழிபடு பொருளாகக் கொண்டவர் வள்ளலார். வண்ணம்வடிவம் கற்பித்தால் கருத்துவேறுபாடு எழுதற்கு வாய்ப்பு உண்டு. கொள்கை வேறு பாடு உடையாரிடையே ஒருமைப்பாடு தோன் றாது. ஒளியை வெறுப்பவர் எங்கும் இரார். எச்சமயத்தாரும் ஒளியை விரும்புவார்..எனவே ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையை வலி யுறுத்திய வள்ளலார் இவ்வொளி வழிபாட் டைப் போற்றியதில் வியப்பில்லை. ஒளியை உருவாகவும் கொள்ள இயலாது, அருவாகவும் கொள்ள இயலாது. உரு கண்ணில் புலனாக வேண்டும்.சோதிகண்ணுக்குப் புலனாகவும்,பிடி படாமலும் உள்ளது. பிடிபடாததால் உருவாகும் இங்ஙனம் உருவாகவும் அருவாகவும் விளங்குவ தால் சுமார் 700 இடங்களுக்கு மேலாக அறுபதுக்கும் மேலான அடை கொடுத்துச் சோதியைப் போற்றுகின்றார். இந்த அள விற்கு ஒளி வழிபாட்டைப் போற்றியவர் தமிழக ஞானியார் யாரும் இல்லை எனலாம்.

புறஒளிவழிபாடு அகஒளிவழிபாட்டிற்கு
வழிசெய்யும் என்பது வள்ளலாரது
கருத்தாகும்.

'மூலநாடி தன்னிலேமுளைத்தெழுந்த சோதி
— சிவவாக்கியர்

'உச்சிக்குநேரேயுண் ணாவுக்கு மேல்நிசும
வைத்த விளக்கும் எரியுதடி'
— வாலைக்கும்மி

'மெய்ஞ்ஞான மெய் விளக்கே'
— எந்நாட் கண்ணி

'புருவமென்ற சுழுனையிலே மைந்தா கேளு
போதுமென்ற அருள்ஞான செந்தீப் பற்றிக்
திருவருந் மாளிகையில் தீபங்காணும்'
— நிஜானந்தபோதம்

'மூடத்துள் நின்ற ஜோதி'— திருமந்திரம்

எனத் தமக்கு முன்வந்த ஞானியர் கருத்துகள் போலவே அடிகளாரும் கூறியுள்ளார்.

'சுண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே'

'காற்றறியாத தீபம்'

'அறையாத மிகுபெருங்காற் றடித்தாலும்
சிறிதும்
அசையாதே அவியாதே அண்டபகிர் அண்டத்
துறையாவும் பிண்டவகைத் துறைமுழுதுப்
விளங்கத்
தூண்டாதே விளங்குகின்ற சோதிமணி
விளக்கே'

சமயத் தொடர்புடையராக ஆன்மீக வாழ்க்கையைத் தொடங்கிய வள்ளலார் சாதி மதம், சமயம், சாத்திரம் ,கோத்திரம் அனைத் தும் பொய் பொய்யே என வன்மையாகச் சாடும் உள்ளத் தெளிவும் வலிமையும் பெற்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற சித்தராவார்.

'கலையுரைத்த கற்பனையே நிலையெனக்
கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக'

'சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன.
சாத்திரக் குப்பையும் தணந்தேன்'

'நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சரிதமெலாம் பிள்ளை
விளையாட்டே'

'இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்
இவைமுதலா இந்திர சாலங்கள்'' என்பனசில
சான்றுகள்

அரிய பல சித்தாடிய வாழ்வினராகிய பெருஞ்சித்தராகிய வள்ளலாரது அருள் விளை யாடல்களைப் பல நூல்களிலுங் காணலாம். ஆனாலும அடிகளார் அவ்வருள் விளை யாட்டினைப் 'பிச்சு' என்று இகழ்ந்ததுண்டு. 'ஆசை யுண்டேல் வம்மின் என்று உலகர்அனை வரையும் அழைத்து ''மரணமிலாப் பெருவாழ் வில் வாழ்ந்திடலாம் கண்டீர், பொய்புகலேன் புனைந்துரையேன் சத்தியம் சொல்லுகிறேன்' என வலியுறுத்தப் பெறும் அளவிற்கு அனை வரையும் மரணமிலாப் பெருவாழ்விற்கு அழைத்த பெருஞ்சித்தர் வள்ளலார் ஆவார்.

— —

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

(58)

விநாயகப் பெருமான் தம்பிக்கு உதவி புரிவதற்காக அக்கணமே மதயானை வடிவு கொண்டு, மலையும் மண்ணும் நடுங்க அங்கம் குலுங்க ஓடி வந்தருளினார்!

வள்ளியம்மையார் மதயானை நெருங்குவது கண்டு அஞ்சினார். திசை புரியாமல் ஓடித் தாம் வெறுத்தொதுக்கிய விருத்த முனிவரையே தழுவிக் கொண்டார். 'யானையிடமிருந்து என்னைக் காப்பாற்றும்' என்று அலறினார்.

முருகப்பெருமான் யானையாக வந்து விநாயகப் பெருமானை வழிபட்டுத் துதித்து, 'தாங்கள் மீண்டெழுந்தருள்க' என்று விண்ணப்பம் செய்தார். விநாயகரும் மறைந்தருளினார். முருகப்பெருமான் தமது இயல்பான ஆறுமுகத் திருவுருவை அக்கணமே வள்ளியம்மைக்குக் காட்டியருளினார்.

''முந்நான்குதோளும் முகங்களோர்மூவிரண்டும்
கொன்னார்வை வேலுங் குலிசமும் ஏனைப்
படையும்
பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்
மின்னாள் கண்காண வெளிநின்
றனன்விறலோன்''

பன்னிரண்டு திருப்புயங்களும், வேற்படையும், குலிசமும், மற்றைய ஆயுதங்களும் தாங்கி மயில் வாகனத்தில் காட்சியளித்த ஐயனைக் கண்ட வள்ளிப் பிராட்டியார் எத்தகைய உணர்ச்சிகள் எய்தி இருப்பார் என்பதை நாம் எப்படி வருணிக்க முடியும்? இவரையா வெறுத்து ஒதுக்கினோம் என்ற அச்சம் தோன்றிற்று. வள்ளியம்மை பெருமானைப் பணிந்தும் துதித்தும் ஆராத ஆன்மக் காதலில் கசிந்தார். முருகவேளின் அருட்கண் பார்வை வள்ளிப் பிராட்டியாருக்கு ஞான தீட்சையாகியது. மெல்லமெல்ல வள்ளியும் தெளிந்து பேசலானாள். ''எம்பெருமானே! இத் திருவுருவத்தை முன்னரே காட்டாமையினால் அடியேன் செய்த பிழைகளைப் பொருத்தருள வேண்டும்.'' என்று அன்புடன் வேண்டிக் கொண்டார். கந்தவேள் பிராட்டியாரை நோக்கி அருள்மழை பொழிந்தார். ''பெண்ணே! நீ முற்பிறப்பில் திருமாலின் புதலவி, நம்மை நோக்கி மணக்குமாறு நற்றவம் செய்தாய். ஆதலால் இப்பிறப்பில் நாம் உம்மிடம் வலிதில் வந்து அருள் புரிந்தோம்; எம்மையன்றி உன் மனத்தில் வேறெவர்க்கும் இடமில்லை' என்று திருவாய் மலர்ந்தருளினார். பின்னர் கந்தப்பெருமான், 'வள்ளி! நீ தினைப்புனம் செல்; யாமும் அங்கே வருவோம்' என்று கூறி அனுப்பினார்.

தினைப்புனம் திரும்பிய வள்ளியம்மையார் மீண்டும் பரண்மீது நின்று, 'ஆலோலம்' என்று ஆலோட்டினார். அப்போது புனங்காக்கும் பாங்கி வந்து அம்மையாரை வணங்கினாள். வள்ளியம்மையார் சூடிய பூக்களின் மணம் அவயவங்களின் தோற்றம் முதலியவற்றின் மாற்றத்தைக் கண்டு ஐயங்கொண்டாள். 'அம்மா! தினைப்புனத்தைப் பறவைகள் பாழ்படுத்த இவ்வளவு காலம் எங்குச் சென்றாய்' என்று வினவினாள். அதனைக் கேட்டு வெட்கிய நாயகியார். 'நான் மலைமீதுள்ள சுனையில் நீராடச் சென்றேன்' என்று நாணத்துடன் கூறினார்.

'மைவிழிச் சிவப்பவும் வாய்வெளுப்பவும்
மெய்வியர் வடையவும் நகிலம் விம்மவும்
கைவளை நெகிழவும் காட்டுந் தண்சுனை
எவ்விடை யிருந்துள தியம்பு வாயென்றாள்''

வள்ளியம்மையார் மீண்டும் பாங்கியைப் பார்த்து ''நான் உன்னையே உற்ற தோழியாக எண்ணியிருந்தேன். என்மீது குறையாக எண்ணாதே?' என்றார். அச்சமயத்தில் ஆறுமுகக் கடவுள் முன்போலவே வடிவுதாங்கிவேட்டையாடி இளைத்தவர் போல் அங்கு வந்தார். வள்ளி நாயகியாரையும் பாங்கியையும் நோக்கி 'பெண்மணிகளே! என் கணையால் தாக்குண்டு பிளந்த வாயும் புண்பட்ட மேனியும் கொண்ட பெண் யானை ஒன்று இங்கு வந்ததோ, அதனை நீங்கள் கண்டதுண்டோ' என்று வினவியருளினார். வந்தவர் கண்களும், இருந்தவள் கண்களும் உரையாடுவதிலிருந்தே இருவரின் கருத்துக்களைக் கண்டு கொண்ட பாங்கி, 'அம்மையாடிய சுனை இதுதான் போலும்'



என்று எண்ணி, தனது புனத்துக்குச் சென்று பரண்மேல் இருந்தாள்.

வேழம் வினாவி வந்த வேலவர் பாங்கியிடம் சென்றார். இன்னும் அவர் லீலைகள் மீதம் வைத்திருந்தார். எல்லாம் முடிந்த பின்பே சீவனும்சிவமும் ஐக்கியமாக வேண்டும்! 'பெண்ணே! எனக்கு உற்ற உறவினர் நீயே; விரும்பியபொருள் எல்லாவற்றையும் நான் தருவேன்; நின் தலைவியை எனக்குத் தருவாய் என்று பாங்கியிடம் வேலவர் கேட்டு அருளினார். பாங்கி .'ஐயா! குறவரினப் பேதைப் பெண்ணைப் பெரியோர் விரும்புவரோ?' என்றாள்.

''பெண்ணே! திருமால் தந்த அமுதமும், வேட்டுவர் செய்த மாதவப் பயனும், பெண்களுக்கு அரசியும், எனக்கு ஆசையைத் தந்து பேரருள் செய்த பேரழகியுமாகிய தலைவியை பார்த்து பேதை என்று கூறியதே பேதமை' என்று கூறினார் ஐயன்.

'ஐயா! இங்கே வேடர் வருவர். மிகக் கொடியவர்களான அவர்கள் இதனைக் கண்டால் பேராபத்தாக முடியும். விரைவில் இங்கிருந்து போம்' என்றாள் பாங்கி. பெருமான்,

'தோட்டின் மீதுசெல் விழியினாய்
தோகையோடென்னைக்
கூட்டிடா யெனிற் கிழிதனில்
அனங்கவேள் கோலந்
தீட்டி மாமடலேறிம்
மூர்த்தெரு வதனி
வோட்டு வேனிது நாளையான்
செய்வதென் றுரைத்தான்''

தலைவியை அடையவொண்ணாத தலைவன் பனைமடலாலான குதிரையை ஏறிஊர்தல் பண்டைய பழக்கம். இதனைச் செய்வதாக முருகன் கூறியதும், 'ஐயா! நீங்கள் மடலேற வேண்டாம். அதோ தெரிகின்ற மாதவிப் பொதும்பரில் மறைந்திரும். நான் என் தலைவியை அங்கே அழைத்து வருவேன்' என்றாள் பாங்கி, அதன்படி, மயிலேறும் ஐயன் மாதவிப் பொதும்பரில் மறைந்திருந்தார்.

பாங்கி, வள்ளிநாயகியைப் பொதும்பரிடம் அழைத்தேகினாள். பிராட்டியாரை அங்கேயே விட்டுவிட்டு, 'நான் உனக்கு மலர் பறித்துக் கொண்டு வருவேன்''! என்று கூறி அங்கிருந்து நீங்கினாள். பாங்கி நீங்கியதும் பரமன் வெளிப்பட்டு மெல்லப் பாவை வேந்துக்குப் பேரின்பம் நல்கினார். பிறகு, 'நாளை வருவேன்; நீ உன் இருக்கை செல்' என நீங்கினார். பாங்கி மலர் பறித்து வந்து சூட்டி, மனம் நொந்த தலைவியுடன் புனம்போந்தாள்.

•

முருகவேளைப் பிரிந்து வந்த வள்ளி நாயகியார், தினைப்புனத்தைக் காவல் காக்கும் போது மனம் மிகவாடி இருந்தார். இவ்வாறாகச் சில பகல்கள் கழிந்தன. தினைப்

புனத்தில் கதிர்கள் முற்றி விளைந்தன. குன்ற வாணர்கள் அதனைக் கண்டு மகிழ்ந்தனர். அவர்கள் வள்ளிப் பிராட்டியாரை நோக்கி 'அம்மா! தினைகள் விளைந்து விட்டன. மிகவும் வருந்தி இதனைக் காத்தனை! இனி உன் சிறு குடிலுக்குச் செல்வாயாக'' என்றார், அம்மை அதனைக் கேட்டு மிகவும் மனம் வருந்தினாள். 'ஆகா! பிரானேசர் சிற்றூருக்கு வழி அறிவாரோ; அவர் இங்கு வந்து தேடு வாரே!' என்றெல்லாம் கலங்கினாள். இறை வன் எளியவனாக வந்து அருள் புரிந்ததால், அவரை எளிய மானுடனாக எண்ணித்தான் அன்பு செலுத்தத் தோன்றும் போலும்.

'மான் இனங்காள்! குயில் இனங்காள்! என் பெருமானுக்கு நான் புனம்விட்டுச் சென்ற செய்தியைச் சொல்லுங்கள்' என்று தூது விடுத்துக் கொண்டே பாங்கியோடு புனத்தை விட்டுச் சென்றாள் வள்ளி.

வீடு திரும்பிய வள்ளிப் பிராட்டியாருக்குப் பிரிவுத் துன்பம் மிகுந்தது. அத்துன்பத்தைப் பொறுக்காது அவசமுற்று வீழ்ந்தனர். பாவை யர் வந்து எடுத்து அணைத்து, மேனி மெலிந் தும் வளை கழன்றும் உள்ள தன்மைகளை நோக்கி 'ஏதோ தெய்வம் பிடித்துள்ளது' என்று கூறினார்கள். முருகப் பெருமானை வழிபட்டுத் தெய்வக்குறி கேட்டு வெறியாட்ட யர்ந்தனர். வெறியாட்டாளன்மேல் முருக வேள் ஆவேசமாகி 'எமது மனம் மகிழும்படி சிறப்புச் செய்தால் இக்குறை நீங்கும்' என்று குறிப்பில் கூறியருளினார். ஆயினும் தமது மகளைத் தேவநாயகனுக்கு மணமுடிக்க இயலும் எனக் குறவர் எண்ணிப் பார்க்கவும் முடியுமோ?

ஊர் எல்லாம் உறங்கியும், பிரிவுத் துன் பத்தால் வாடிய வள்ளிக்கு உறக்கம் பிடிக்க வில்லை. பொறி புலன்கள் எல்லாம் உறங்கி னாலும், ஆன்மா விழித்திருக்கும் என்பது இதன் கருத்து. பக்திக்கும் காதலுக்கும் உணர்வு நிலை ஒன்றுதான்.

வள்ளிப் பிராட்டியார் தினைப்புனத்தை விட்டுத் தம் சிற்றூர்க்குச் சென்றபின் வேடர்கள் தினையை அறுத்துக் கொண்டு திரும்பினார்கள். முருகவேள் தினைப்புனம் சென்று திருவிளையாடல் செய்வார் போல் வள்ளியம்மையாரைத் தேடினார். அங்கு அவரைக் காணாது நள்ளிரவில் சிற்றூர் வந்து குடிலுக்குப் புறம்பே நின்றார். அதனை உணர்ந்த பாங்கி முருகவேளிடம் வந்து,'ஐயா! நீர் இப்படி இரவில் இங்கு வருவது தகாது. ஆதலால் அவளை அழைத்துக் கொண்டு தங்கள் தலைநகருக்குச் செல்லுங்கள்'' என்று கூறினாள். அவரை அவ்விடத்திலேயே நிற்கச் செய்துவிட்டு. யாரும் அறியாவண்ணம்வள்ளிப் பிராட்டியாரை அழைத்து வந்து கந்தவேளி டம் ஒப்புவித்தாள். வள்ளிநாயகியார் முருக வேளின் பாதங்களைப் பணிந்து, 'வேதங்கள் காணாத உமது மலர்த்தாள் நோவ என் பொருட்டு இவ்வேடச் சேரிக்கு நள்ளிரவில் எழுந்தருளினீரே' என்று தொழுது நின்றார். பாங்கி, முருகப்பெருமானின் திருக்கரத்தில் வள்ளிப் பிராட்டியாரை அளித்து, 'ஐயா! இங்கு நீண்டநேரம் நின்றால் வேடர்கள் கண்டு விடுவார்கள். அவர்கள் கண்டுவிட்டால் பெரும் தீமையாய் முடியும். இம்மாதரசியைஅழைத்து கொண்டு உங்கள் பதிக்குச் சென்று காத்தருள வேண்டும்' என்று கூறி வணங்கி நின்றாள். எம்பிரான் பாங்கிக்குத் தண்ணருள் புரிந்தார். பாங்கி வள்ளி நாயகியாரைத் தொழுது அணைத்தாள். குமாரக் கடவுள் வள்ளிநாயகி யாருடன் சிற்றூரைத் தாண்டிச் சென்று ஓர் இளம் பூங்காவில் தங்கினார்.

விடியற்காலம் நம்பிராசனின் மனைவி கொடிச்சி துயில் நீங்கி எழுந்தாள். வள்ளி நாயகியாரைக் காணாது துடுக்கிட்டு வருந்தி னாள். நம்பிராசனும் இதனைக் கேள்வியுற் றான். வெகுண்டு 'எமது காவலைக் கடந்து எம்குலவிளக்கைக் கொண்டு போனவன் யார்?' என்று போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான். அவனுடன் வேடர்கள் கொம்புமுதலியவற்றை ஊதிக் கொண்டு சென்றார்கள்.

புலிகள் மான் குட்டிகளைத் தேடுவது போல வேடர் பலர் தம்மைத் தொடருவதை யறிந்த வள்ளிப் பிராட்டி குமாரக் கடவுளைப் பணிந்து, 'எம்பெருமானே ! ஈட்டி, பிண்டி பாலம், வில், வாள முதலிய ஆயுதங்களுடன் வேடர் பலர் சோலைக்கு அருகில் வருகிறார்கள் இனி என் செய்வது? என் உள்ளம் சுழல்கிறது' என்று கூறினார். 'பெண்ணரசே! வருந்தாதே, சூராதியவுணரை மாய்த்த வேற்படை நம் மிடம் இருக்கிறது; வேடர் வெகுண்டு போர் புரிந்தால் அவர்களைக் கணப்பொழுதில் மாய்ப்போம். நீ பின்புறத்தில் இருப்பாயாக' என்று கந்தவேள் அருளிச் செய்தார்.

வேடர்கள் வந்து பெருமானைச் சூழ்ந்த னர். 'நம் குலக் கொடியைக் கவர்ந்தவன் நம்மைக் கண்டு ஓடவுமில்லை. அஞ்சவுமில்லை அடியுங்கள், பிடியுங்கள்' என்று கூறி வேட ருடன் பாண மழைபொழிந்தான் நம்பிராசன். அந்தக் கணைகள் யாவும் கருணைக் கடலாகிய கந்தவேள் மீது மலர்களைப் போல் வந்து வீழ்ந்தன. முருகப் பெருமான் திருவுளஞ் செய்ய, சேவல் எழுந்து நின்று கொக்கரித்துக் கூவியது. அந்த ஒலியிலேயே நம்பிராசனும் அவன் குமாரர்களும், சுற்றத்தாரும் மாய்ந்த னர்.

தந்தையும் உடன் பிறந்தாரும் தமரும் மாண்டதைக் கண்ட வள்ளிப் பிராட்டியார் மனம் பதைத்து வருந்தினார். அம்மையாரின் அன்பைக் காணும் பொருட்டு ஐயன்சோலை யைவிட்டு நீங்கிச் சென்றார். அம்மையாரும் அவரைத் தொடர்ந்து சென்றார். அப்போது வழியில் நம்பிராசன் செய்த தவப்பயனைப் போல் நாரதர் எதிர்ப்பட்டார். 'சுவாமி! பெற்ற பிதாவையும் பிற சுற்றத்தாரையும் வதைத்து எம்பிராட்டியைக் கொண்டேகுதல்

தகுதியாமோ? அது அம்மைக்கு வருத்தத்தைத் தரும்'' என்றார். நாரதர் எம்பெருமான் மீண்டும் சோலைக்குச் சென்று நம்மோடு போரிட்டு இறந்த உன் சுற்றத்தாரை எழுப்பு வாயாக' என்று பணித்தருளினார். வள்ளி அருள் பாலித்தாள். துயில் நீங்கி எழுவது போன்று நம்பிராசன் தன சுற்றத்தோடு எழுந் தான் வள்ளிக்கு யாவரையும் வாழ வைக்கும் வல்லமை உண்டு; எனினும் கணவரின் கட் டளைக்காகவே காத்திருந்தார் என்பது இத னால் தெரிகிறது.

லீலைகளெல்லாம் நிறைவு செய்துவிட்ட எம்பெருமான் உயிர்த்தெழுந்த நம்பிராசனுக்கு ஆறு திருமுகமும் பன்னிரு திருக்கரமும் கொண்டு காட்சியளித்தார். நம்பிராசன் வேட்டுவர்களுடன் ஆறுமுகப் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து பணிந்து எழுந்தான். உச்சிக் கூப்பிய கையனாய் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். 'தேவ தேவ! எங்கள் சேரியைக் காக்கும் நீரே இவ்வாறு எமது குலக்கொடியை களவு செய்து எங்கள் குலத்துக்குத் தீராத பழியை நல்கின் யாம் என் செய்வோம்? அன்னையே மகவுக்குவிடமூட்டின் கதி யாது? தேவரீர் இனியேனும் எம் சிற்றூர்க்கு வந்து அக்கினி சாட்சியாக முறைப்படி எம் புதல்வியை மணந்து கொண்டு, தங்களுடைய பதிக்கு அழைத்துச் செல்வீராக'' என்று வேண்டி நின்றான்.

அவனது வேண்டுகோளுக்கு இரங்கிய கந்தக் கடவுள், வள்ளிநாயகியுடனும் நாரத ருடனும் சிற்றூருக்கு வந்தருளினார். நம்பி தனது சிறு குடிலில் புலித்தோல் மீது எம்பி ரானைப் பிராட்டியாருடன் எழுந்தருளச் செய்தான். வேடர், குறவர், மறவர் முதலி யோர், ''எமது குலதெய்வமே, எம் புதல்வியை மணக்க வந்துவிட்டது' என்று உள்ளம் உவந்து பேரானந்தப் பரவசமுற்றுப் போற்றி நின் றார்கள்.

கந்தவேள் தமது மருங்கில் வீற்றிருந்த வள்ளிநாயகியாரைத் திருவருள் நோக்கம் புரிந்தருள, அம்மையார் மானுட வடிவம் நீங்கிப் பண்டைய தேவ வடிவு பெற்று விளங்கி னார்.

''அன்னதோர் வேளை தன்னில் அறுமுகம்
உடைய வள்ளல்
தன்னுழை இருந்த நங்கை தனை அருளோடு
நோக்கக்
கெ ன்னவில் குறவர் மாதர் குயிற்றிய கோலம்
நீங்கி
மு ன்னுறு தெய்வக் கோல முழுதொருங் குற்ற
தன்றே''.

அதனைக் கண்ட நம்பி முதலியோர், 'இப் பிராட்டியார் எம்மிடம் தோன்றி வளர்ந்தது எமது மாதவமே' என்று இறும்பூதெய்தினர். சுப முகூர்த்தத்தில் வேட்டுவ மன்னன் நம்பி, வள்ளிப் பிராட்டியாரின் திருக்கரத்தை மயி லேறும் வள்ளல் திருக்கரத்தில் வைத்து, 'எமது தவப் புதல்வியை உங்களுக்குத் திருமணம் செய்து தந்தேன். ஏற்றுக் கொண்டு அருள் புரிவீர்' என்று தண்ணீர் தாரை வார்த்தான்.

''அந்தநல் வேளை தன்னில் அன்புடைக் குறவர்
கோமான்
கந்தவேள் பாணி தன்னில் கன்னிகை கரத்தை
நல்கி
நந்தவ மாகி வந்த நங்கையை நயப்பாய் இன்று
தந்தனன் கொள்க என்று தண்புனல் தாரை
உய்த்தான்''

நம் பெருமானின் திருவருட் குறிப்பால் நாரதர் வேள்வித் தீ வளர்த்து ஏனைய விதி முறைகளைச் செய்தார்.

ஆலமுண்ட நீலகண்டப் பெருமான், 'பிரமன், திருமால், தேவர்கோமான் முதலிய கணங்கள் சூழ, உமா தேவியாருடன் வந்தருளி விண்ணில் நின்று வள்ளிப் பிராட்டியாரைக் கந்தவேள் மணந்து கொண்ட வைபவத்தைக் கண்டருளினார். திருமாலாதி தேவர்கள் பூமாரி பொழிந்து முருகவேளைப் போற்றித் துதி செய்தனர். ஆறுமுகக் கடவுள் அம்மை யப்பரை வணங்கி, ஏனைய தேவர்களுக்குத் திருவருள் புரிந்தார். சிவபெருமான் தேவர் குழாத்துடன் மறைந்தருளினார்.


''ஆவதோர் காலை தன்னில் அரியும்நான்
முகனும் வானோர்
கோவொடு பிறருஞ் சூழக் குலவரை மடந்தை
யோடும்
தேவர்கள் தேவன் வந்து சேணிமிசை நின்று
செவ்வேள்
பாவையை வதுவை செய்யும் பரிசினை
முழுதுங் கண்டான்''

தனிப்பெருந் தலைவராகிய கந்தப் பெருமான் தனக்கு மருகராகும் பேறுபெற்ற நம்பிராசன் பெரிதும் மகிழ்ந்தான்; தேனும் தினைமாவும் பழங்களும் படைத்து, 'தாங் களும் தேவியும் உண்டருள வேண்டும்' என்று கந்த பெருமானை வேண்டிக் கொண்டான், பெருமான் அவற்றை உட்கொண்டு அருள்புரிந் தார். பின்னர் நம்பிராசனை நோக்கி, 'நாம் வள்ளியுடன் திருத்தணியில் சென்று இருப் போம்' என்று கூறினார். மகளை என்றேனும் ஒரு நாள் பிரிந்துதானாக வேண்டும் என்ப தால் நம்பி உடன் பட்டான். தாயும் பாங்கி யும் செவிலியும் வள்ளிப் பிராட்டியாரைத் தழுவி நல்லாசிகள் கூறிப் பிரியாவிடை பெற்ற னர். முருகவேள் நம்பிராசனை நோக்கி, 'நீ தேவருந்தொழச் சிற்றூரை அரசு புரிந்து பின் நம்பக்கல் வரக்கடவாய்'என்று அருள் புரிந்தார்

ஐயன் அம்மையுடன் தணிகை மாமலைக்கு விண்வழியாக வந்து சேர்ந்தார். தேவதச்சனால் முன்னரே அங்கு அமைக்கப்பட்ட திருக்கோயி லில் உலகமெல்லாம் உய்யுமாறு வள்ளியம்மை யாருடன் எழுந்தருளியிருந்தார்.

**(அடுத்த இதழில் நிறைவு பெறும்)**

# அமர்நீதி நாயனார்



**பேராசிரியர் திருமதி சுமதி குமாரசுவாமி**

**மருத்துவக்கல்வி துணை இயக்குநர், (செவிலியல்) மருத்துவக் கல்வி இயக்ககம்,**

**சேப்பாக்கம், சென்னை-600 005.**

பெரியபுராணம் எனப்பெறும் திருத்தொண்டர் புராணத்தில் அமர்நீதி நாயனார் புராணத்தைச் சேக்கிழார் பெருமான் ஏழாவது புராணமாகப் பாடியுள்ளார்.

''அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்'' என்று அமர்நீதி நாயனாரைப் போற்றுகின்றார் திருத்தொண்டத்தொகையருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சோழநாட்டில் தலைசிறந்து விளங்கிய பழையாறை எனும் ஊரே நம் அமர்நீதி நாயனார் பிறந்தருளிய திருத்தலமாகும். வணிகர் குலத்தில் தோன்றிய அவர்தம் குடிப் பெருமையையும் செல்வப் பெருமையையும் சேக்கிழார் பெருமான் வருணிக்கும் பாடல்கள் பின்வருமாறு:

''சீரில் நீடிய செம்பியர் பொன்னி நன்னாட்டுக்
காரின் மேவிய களிஅளி மலர்ப்பொழில்சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை''


''மன்னும்அப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்
பொன்னும் முத்தும்நன் மணிகளும் பூந்துகில் முதலா
எந்நிலத்தினும் உள்ளன வருவளத் தியல்பால்
அந்நிலைக்கண்மிக்கவர்அமர்நீதியார்என்பார்''

சிவனடியார்களை அமுது செய்விப்பதும் சிவனடியார்களுக்கு ஒல்லும் வகையான் உதவி செய்வதுமே மண்ணில் பிறந்தார் பெரும்பயன் ஆகும் அல்லவா! நம் அமர்நீதி நாயனாரும் அவ்வண்ணமே சிவனடியார்களை அமுது செய்வித்ததோடு, அவர்களுக்குக் கந்தைகீள் கோவணம் அளிக்கும் திருத்தொண்டினையும் செய்து வந்தார்.

''சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதொன் றில்லார்
அந்தி வண்ணர்தம் அடியவர்க், கமுதுசெய் வித்துக்
கந்தைகீளுடை கோவணம் கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார்''

இவ்வண்ணம் பழையாறையில் அறப்பணி செய்துவந்த, சிவநேசச் செல்வரான அமர்நீதி நாயனார் அதன் அருகிருக்கும் திருநலலூர் என்னும் திருத்தலத்திலும் சிவனடியார்களுக்காகத் திருமடம் ஒன்றைக்கட்டி, தாமும் தம் மனைவி மற்றும்மகனுடன் அம்மடத்திலேயே தங்கி அடியார்களைப் புரக்கும் திருப்பணியை நாளும் பெருவிருப்புடன் புரிந்து வந்தார்.

இவ்வாறு அமர்நீதியார் அறப்பணி ஆற்றி வரும் நாளில் ஒருநாள், சிவபெருமானார் ஒரு மறையவர் குலத்துப் பிரம்மாச்சாரியின் வடிவம் பூண்டு அமர்நீதியாரின் திருமடத்திற்கு எழுந்தருளினார். திருமுடியில் சிகையைத் தரித்து, திருவெண்ணீற்றைத் திரிபுண்டரீகமாக அணிந்து, முப்புரிநூலை மான்தோலோடு



மாாபில் கொண்டு, முஞ்சி என்னும் தருப் பையை அரைஞாணாக இடுப்பில் தரித்து, அதில் கோவண ஆடையை இழுத்து அணிந்து கொண்டவராய், திருநீற்றுப்பையுடனும், இரு கோவணம் முடிந்த ஒரு தண்டுடன் வந்த மறை பிரமசாரியாரை அமர்நீதிநாயனார் கண்டார். முகம்மலர்ந்து விரைந்து எதிர்சென்று வணங்கி வரவேற்றார்.

''இத்திருமடத்திற்குத் தாங்கள் எழுந் தருள அடியேன் செய்த தவப்பயனே பயன்'' என்று அமர்நீதியார் முகமன் கூறி வரவேற்க மறைபிரம்மச்சாரியாரும் ''நீர் அன்பினால் பெருகிய அடியார்களுக்கு விருப்புடன் திருவ வமுது செய்து, நல்ல கந்தையும், கீளும், கோவணமும் கொடுப்பதாகக் கேள்விப்பட்டு உம்மைக் காண வந்தேன்'' எனறு கூறினார்.

அதுகேட்டு அமர்நீதிநாயனார் வந்திருக் கும் அடியாரின் பசிதீர அவரை முதலில் அமு தருந்த அழைத்தார். ''இத்திருமடத்தில் நான் மறை உணர்ந்த சிலர்களைத் திருவமுது செய் யும் பொருட்டுத் தக்கபடி வேதியர்கள் யாகம் பண்ணியுள்ளனர். தேவரீரும் திருவமுது செய் தருள வேண்டும்'' என்று அமர்நீதி நாயனார் வேண்டிக் கொண்டார். மறைபிரம்மசாரியும் அமர்நீதியாரி வேண்டுகோளுக்கு இணங்கினார். 'நான் காவேரியில் நீராடி வருகின்றேன். மழை வரும்போல் உள்ளது. இந்த ஒரு கோவணத் தைப் பத்திரப்படுத்தி வையும். மழையில் நனைந்து நான் வருவேன் ஆனால் உடுத்திக் கொள்வதற்கும் பயன்படும்'' என்று தண்டில் கட்டியிருந்த இரு கோவணங்களில் ஒன்றை அவிழ்த்துஅமர்நீதியாரிட ம கொடுத்தார் மறை பிரம்மச்சாரி.

சிவபெருமானார்க்கு வேதங்களே அணி யும் கோவணமாகும். தம் கோவணப் பெரு மையை மறைபிரம்மசாரி அமர்நீதியாரிடம் பின்வருமாறு கூறுகிறார்.

''ஓங்குக் கோவணப் பெருமையைஉள் ளவா
றுமக்கே
ஈங்குநான் சொல வேண்டுவ தில்லை. நீர்
இதனை
வாங்கிநான் வரும் அளவும் உம் மிட த்திக
ழாதே
ஆங்குவைத்துநீர் தாரும்'' என்றவர் கையிற்
கொடுத்தார்''

அமர்நீதிநாயனாரும் மறைபிரம்மசாரி யாரின் கோவணத்தை ஒரு தனியிடத்தில் பத் திரப்படுத்தி வைத்தார். காவிரியில் நீராடிச் சென்ற பெருமான் தாம் கொடுத்துச் சென்ற கோவணத்தை அது வைக்கப்பட்ட இடத்தி லிருந்து மாயமாக மறையச் செய்து மழையை உண்டாக்கி அதில் நனைந்தவாறே அமர்நீதி யாரின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். ''ஈரக்

கோவணத்தை மாற்றவேண்டும். தண்டிலே கட்டியிருந்த கோவணமும் மழையில் நனைந்துவிட்டது. நான் உம்மிடம் தந்து சென்ற கோவணத்தைக் கொண்டு வாரும்'' என்றார் மறைபிரம்மசாரி.

இறைவர் அடியவர்க்கு அடியவர்; அடியவர்களின் அன்பெனும் தூயநீர் ஆடுவதில் தான் இறைவருக்கு அளவிலாத ஆனந்தம். அமர்நீதி நாயனாரின் பக்திப் பெருவெள்ளத்தில் நீந்தி மகிழ உள்ளம் கொண்ட இறைவர் அதற்காகவே கோவணத்தை மறைத்துக் கோவணக் கள்வரும் ஆகிவிட்டார் என்று சேக்கிழார் பெருமான் நயம்பட வருணிக்கும் பாடல் இது:

''தொண்டர் அன்பெனும் தூயநீர் ஆடுதல் வேண்டி
மண்டு தண்புனல் மூழ்கிய ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலுளது ஈரம், நான் தந்த கோவணத்தைக்
கொண்டு வாருமென்று உரைத்தனர் கோவணக் கள்வர்''

அமர்நீதியாரும் தாம் பத்திரப்படுத்தி வைத்திருந்த இடத்தில் கோவணத்தைத் தேடுகிறார். மறையவர் கோவணத்தைக் காணாமல் திடுக்கிடுகிறார். வைத்த இடத்திலும், பிற இடங்களிலும் தேடிக் கோவணத்தைக் காணாமல் மயங்கும் நாயனார் மறையவர் ஈரத்துடன் நின்றிருக்கும் நிலையை எண்ணி வேறொரு புரிய கோவணத்தை எடுத்துக் கொண்டு விரைந்து வந்து 'அடிகளே! நீர் தந்த கோவணம் எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. அது காணாமற் போன மாயத்தை அறியமுடியவில்லை. வேறு ஒரு நல்ல கோவணம், தனியாகவே நெய்யப் பெற்ற புதிய கோவணத்தைக் கொண்டு வந்துள்ளேன். நனைந்த கோவணம் அணிவீராக, என் பிழை பொறுத்தருள்க'' என்று, பணிவு மிக வேண்டுகிறார் அமர்நீதி நாயனார்.

அமர்நீதிநாயனாரின் பணிவான வாசகத்தைச் செவிமடுக்காமலும், அவர் தந்த புதிய கோவணத்தை ஏற்றுக் கொள்ளாமலும் தீ போல சினந்து, கடும் வார்த்தைகளைக் கொட்டுகிறார் ஆட்கொள்ளவந்த மறையவர். ''நல்ல கோவணம் தருகிறேன்'' என்று பறைசாற்றுவது எல்லாம் இதுபோல கோவணத்தை களவாடுவதற்குத் தானா? என் கோவணம் தான் எனக்கு வேண்டும்'' என்று சீறுகிறார் சிவவேதியர்.

''நல்ல கோவணம் கொடுப்பன் என்றுலகின் மேல் நாளும்
சொல்லு வித்ததென் கோவணம் கொள்வது துணிந்தோ?
ஒல்லை ஈங்குறு வாணிபம் அழகிதே உமக்கு என்று
எல்லை இல்லைவன் எரிதுள்ளி னால் என வெகுண்டான்''

நிகழ்ந்துவிட்ட இத்தவறு யான்வேண்டுமென்று செய்த தவறு அன்று. யான்செய்த பிழைக்காக நீங்கள் எது செய்ய சொன்னாலும் செய்கிறேன். புதிய கோவணம் மட்டுமல்ல நல்ல பட்டாடைகள், பொன்மணிகள் முதலியவற்றையும் போதும்என்று கூறும் அளவிற்கு நான் தருகிறேன். என் பெரும்பிழையைப் பொறுத்து அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று பணிவுடன் வேண்டுகிறார் அமர்நீதி நாயனார்.

அமர்நீதியாரின் வேண்டுதலைக் கேட்டுக் கோபம் சிறிது தணிகிற மறையவர் 'நீர்தரும் பொன், மணிகள், பட்டாடைகளைக் கொண்டு நான் என்ன செய்ய முடியும். என் கோவணத்திற்கு ஈடாகும் கோவணத்தைக் கொடும். அது போதும். என் தண்டிலுள்ள இந்தக் கோவணம் நீ காணாமல் போக்கிய கோவணத்திற்கு ஒப்பானது; அதனால் இதற்குச் சம எடையுள்ள கோவணத்தை நிறுத்துக் கொடு' என்று கூறுகிறார். அமர்நீதியாரும் அது கேட்டு மகிழ்ந்து ஒரு தராசைக் கொண்டு வந்துநாட்டி அதில் மறையவர் தந்த கோவணத்தை ஒரு தட்டில் வைத்து, நெய்ததாகிய புதிய கோவணத்தை மற்றொரு தட்டில் வைக்கிறார். ஆனால் தட்டுகள் சரியாக வில்லை. அடியார்களுக்கு அளிப்பதற்காக வைத்திருந்த கோவணம் அனைத்தையும் ஒவ்வொன்றாக இட இட, அப்பொழுதும் தட்டு சமமாகவில்லை.

அமர்நீதி நாயனார் தம்மிடமிருந்த பட்டாடைகளை, பிற ஆடைகளைக் கொண்டு வந்து வைத்தும், நூல் பொதிகள் பல வைத்தும் தம் மனையிலிருந்த பொன், வெள்ளி, நவமணிகள், பிற உலோகங்களால் ஆன பொருள்கள் எல்லாவற்றையும் கொண்டு வந்து வைத்தும் மறையவர்தம் கோவணத்திற்கு அவை ஈடாகவே இல்லை. எம்பெருமானார் கோவணத்திற்கு ஏழுலகும்தான் ஈடாகுமோ என்று சேக்கிழார் வினவும் நயமான பாடல் இது:

''தவம் நிறைந்த நான்மறைப்பொருள் நூல்களாற் சமைந்த
சிவன் விரும்பிய கோவணம் இடும் செழுந் தட்டுக்கு
அவனிமேல் அமர்நீதியார் தனமெலாம் அன்றிப்
புவனம் யாவையும்நேர்நிலாஎன்பதுபுகழோ?''

நம்மிடமிருந்த பொருள்களனைத்தையும் வைத்த பிறகும் நிறை சரியாகாததைக் காணும் அமர்நீதி நாயனார் தம்மையே தந்தால் தான் தராசின் தட்டு சரியாகும் என்பதாக உணர்ந்து ''அடியேனும், என் மனைவியும் மகனும் தட்டில் ஏறுவதற்கு அருள் தர வேண்டும் என்று வேண்ட இறைவராகிய மறையவரும் அதற்குத் தம் இசைவைத் தருகிறார். அமர் நீதியாரும் மனைவிமகனோடு மறையவரின் மலரடிகளை வணங்கி, துலாக்கோலையும் வலம்வந்து வணங்கி ''நாங்கள் திருவெண்ணீற்றிலே மாறாத அன்பு கொண்டு இறைத் தொண்டைப் பிழை சிறிதும் இன்றி ஆற்றி வந்தது உண்மையானால் இத் துலாக்கோலின்

தட்டுகள் சமமாகட்டும்'' என்று வேண்டிய வாறே ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டு தராசில் ஏறுகிறார்கள்.

''இழைத்த அன்பினில் இறைதிரு நீற்று
மெய்யடிமை
பிழைத்தி லோம்எனில் பெருந்துலை நேர்நிற்க'
என்று
மழைத்தடம்பொழில் திருநல்லூர் இறைவரை
வணங்கி
தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார்
தட்டில்''

ஒரு தட்டில் இடப்பட்ட கோவணம் வேதம் ஆனதால் இறைவனைத் தன்னுள் கொண்டது. மறுதட்டில் ஏறிநின்ற அடியவர் மனமும் இறைவனைத் தன்னுள் கொண்டது. ஆகவே இரண்டு தட்டுகளும் நேர் நின்றன. அவ்வற்புதத்தைக் கண்ட புவிவாழும் மாந்தரும் வான் வாழும் தேவர்களும், பூமாரி பொழிந்தனர். மறை ப்ரம்மசாரியாக வந்த இறைவரும் அம்மையப்பராகக் காட்சி தந்து அமர்நீதியாருக்கு ஆசி வழங்க, அத்தராசுத் தட்டே விமானமாக மாறி அவர்களைக் கயிலாயத்திற்குக் கொண்டு சேர்த்தது.

''நாதர்தம்திரு வருளினால் நற்பெருந்
துலையே
மீதுகொண்டெழு விமானம தாகி மேற்
செல்லக்
கோதில் அன்பரும் குடும்பமும் குறைவறக்
கொடுத்த
ஆதிமூர்த்தி யாருடன் சிவபுரியினை
அணைந்தார்''

இறைவனை நம்பும் அடியவர்க்கு ஒரு துன்பமும் நேராது என்கிறார் திருவள்ளுவர்.

''வேண்டுதல் வேண்டாமை இலானடி
சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல''

என்பதுகுறள்இறைவனையேசிந்தையில்வைத்து இறைத் தொண்டு புரிந்த அமர்நீதிநாயனாருக்கும் துன்பம் சேரவில்லை. இன்பமே சேர்ந்தது. இறைவனை நம்பும் அடியவர்க்கு வரும் துன்பமெல்லாம் இன்பமாக நிறையும் என்ற உண்மையை அமர்நீதி நாயனாரின் வரலாறு மூலம் நமக்குச் சேக்கிழார் தெளிவுபடுத்துகிறார்.

''ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பர் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்குபுக் காரே''
(திருமந்திரம் 273)

''ஈசன் அறியும் இராப்பகலுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பாவுசெய் வார்களைத்
தேசுற் றறிந்து செயலற் றிருந்திடில்
ஈசன்வந் தெம்மிடை முட்டிநின் றானே''
(திருமந்திரம் 288)



## கடவுள் ஒருவரே

எல்லா சமயங்களும் கடவுளை வழிபட ஏற்பட்டனவே ஆகும். எல்லா சமயங்களும் கடவுள் ஒருவர் என்றே சொல்கின்றன. ஒருவரேயான அந்தக் கடவுளை நாம் எந்த மதத்தின் மூலம் வழிபட்டாலும் அவர் அதை ஏற்றுக் கொள்ளத்தான் செய்வார்.


(நூறாவது பிறந்த விழாக்காணும் ஜெகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளின் ''தெய்வத்தின் குரலில்', இருந்து)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



திருப்போரூரை அடுத்த செம்பாக்கம் அருள்மிகு சிவப்பிரகாசர் ஆலயத்தில் திருக்கோயில் இதழாசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம் அவர்கள் எழுதியுள்ள ''பாரதப் போரில் பார்த்தசாரதி'' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. தவத்திரு மாதாஜி லலிதா தேவி அம்மையார் நூலை வெளியிட நூலின் முதல் இரு பிரதிகளை சிவத்திரு வீரபத்திரையா, சிவத்திரு வேதாசலனார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

பதிவு எண் எம். 7039



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் பங்குனிப்பெருவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. இவ்விழாவின்போது நடைபெற்ற அறுபத்து மூவர் விழாவில் நமது அறநிலையத் துறையின் ஆணையாளர் திருமதி சி.கே. கரியாலி, ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

